பக்கங்கள்:-28

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 24 | ஞாயிற்றுக்கிழமை | 07.04.2024 | அதிர்வு 250 |
|---|---|---|---|---|---|

## சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்குள் பிரவேசிப்பதற்குத் தடை

கொழும்பு–டார்லிவீதியில்அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்குள் பிரவேசிப்பதற்கு சகல தரப்பினருக்கும் தற்காலிகமாக 06




### வழக்கு விவகாரம் கைமீறிப்போயுள்ளது

# என்னை மலினப்படுத்த தமிழரசுக்குள் சிலர் சதி

### சிறீதரன் கடும் சீற்றம்

**“வேறு நபர்களை வைத்து என்னை மலினப்படுத்துகின்ற விடயங்களை எங்களுடைய கட்சியியைச் சார்ந்த சிலர் மிகவும் நூதனமாகக் கைக் கொள்கின்றார்கள்.”**

**– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடும் சீற்றத்துடன் தெரிவித்தார்.** 06

### மாரடைப்பால் நடுக்கடலில் அந்தரித்த

# இலங்கை மீனவரை மீட்ட இந்திய விமானப் படை

### சென்னை வைத்தியசாலையில் அனுமதி




(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றவருக்கு நடுக்கடலில் மாரடைப்பு ஏற்பட்டதால் இந்திய விமானப் படையின் ஹெலி அவரை மீட்டு சென்னை வைத்தியசாலையில் சேர்த்துள்ளது.

இலங்கையில் இருந்து புறப்பட்ட நீண்ட நாள் படகில் இருந்த மீனவர் ஒருவருக்கு 06



சரித்திரம் திரும்புகின்றது என்று நினைக்கிறேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிதாமகர் – ஆசிய அரசியலில்மூத்தகிழட்டு நரி என கருதப்பட்டவர் – முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன. அவரே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் குரு. சொந்த மாமனும் கூட.

United National Party (ஐக்கிய தேசியக் கட்சியின்) சுருக்கத்தை – UNP என்பதை – Uncle - Nephew Party (மாமன் – மருமகன் கட்சி) என்று கிண்டலாக முன்னர் அழைப்பதுண்டு.

மாமன் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமை வகித்த கட்சியை இப்போது மருமகன் ரணில் விக்கிரமசிங்க முப்பது 06

# தமிழர் விடுதலைக் கூட்டணியை அபகரித்துச் செல்ல பல அரசியல் வியாபாரிகள் முன்வந்திருக்கின்றனராம்

## மகளிர் பேரவை செயலாளர் சூரிய பிரதீபா சீற்றத்துடன் தகவல்




(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் விடுதலைக் கூட்டணியை அபகரித்துச் செல்ல அல்லது எடுத்துச் செல்ல பல அரசியல் வியாபாரிகள் முன்வந்திருக்கின்றனர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் மகளிர் பேரவை செயலாளரும் மத்திய குழு உறுப்பினருமான சூரிய பிரதீபா தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போது கருத்து வெளியிடுகையிலையே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் என்ற போர்வையில் புதிது புதிதாக சிலர் தற்போது கட்சிக்குள் புகுந்துள்ளனர். அவ்வாறு புகுந்திருப்பவர்கள் இந்தக் கட்சியை அபகரித்து செல்லவே முயற்சி எடுக்கின்றனர்.

ஆனால் கட்சியை அபகரித்துச் செல்ல முயற்சிப்பவர்களுக்கு எப்பொழுதும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இடமளிக்கப்படாது. அவர்களின் வியாபார எண்ணங்களும் ஒருபோதும் நிறைவேறா.

இவ்வாறான நிலைமையில்தான் கடந்த வாரம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டமும் வவுனியாவில் மிக இரகசியமாக நடாத்தப்பட்டிருக்கிறது. மத்திய குழு உறுப்பினர்கள் பலருக்கு அறிவிக்காமல் கூட்டப்பட்ட இந்த மத்திய குழுக் கூட்டத்துக்கு எதிராகவும், புதிய உறுப்பினர்கள் நியமனத்திற்கு எதிராகவும் தடைகோரி வவுனியா நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருக்கிறோம்.

இந்நிலையில் எமது கட்சியின் செயலாளர் நாயகத்தின் (ஆனந்தசங்கரியின்) தற்போதைய நிலைமை என்பது ஒரு தர்ம சங்கடமான சூழ்நிலையாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். அவருடைய முதுமை காரணமாக அவரால் தனியாகச் செயல்பட முடியாத ஒரு சூழ்நிலையில் அவருக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தி கட்சியை சூறையாட அரசியல் வியாபாரிகள் முயற்சிக்கின்றனர்.

உண்மையில் தலைமைக்குக் கட்சியைக் கொண்டு நடத்த முடியவில்லையாயின் அதற்கு கட்சியில் இருக்கிற சரியான நபர்களை தெரிவு செய்து அனைவரது சம்மத்துடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதனைவிடுத்து கட்சியை கைப்பற்றும் வியாபார நோக்கில் திடீரெனக் கட்சிக்குள் உட்புகுந்துள்ளவர்களிடம் எமது கட்சியை இப்போதைய கட்சித் தலைமை ஒப்படைக்க முயல்வதை ஏற்கமுடியாது.

அவருடைய முதுமை காரணமாக நாங்கள் சற்று விலகி நின்றாலும் கூட அவருடைய செயல்பாட்டிற்குத் தடங்கல் ஏற்படுத்தி, இந்தக் கட்சியை அபகரித்துச் செல்ல நினைப்பவர்களுடைய செயற்பாட்டில் எந்த ஒரு மாற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறான காரியங்களில் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபட அவர்களை அனுமதிக்க முடியாது என்பதன் காரணமாகவே இந்த வழக்கை நாங்கள் பதிவு செய்தோம்.

யார் வரவேண்டும், வந்து எவ்வளவு காலம் எவ்வாறு பணியாற்ற வேண்டும், யார், யார் மத்திய குழுவில் அங்கத்தவர்களாக பயணிக்க முடியும் என்பவை தொடர்பில் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. கட்சியின் யாப்பில் அவை மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

எனவே கட்சியினுடைய யாப்பு விதிகளுக்கு அமைவாக எதிர்வரும் காலங்களில் வரும் புதிய நபர்களுக்கான பதவிகள், அவர்களுக்கான பொறுப்புகள் நிச்சயமாக வழங்கப்படும். யாரும் அவசரமாக வந்து கட்சியை அபகரித்துச் செல்ல முடியாது என்பதை இங்கு தெளிவாகக் கூறி வைக்க விரும்புகின்றோம்.

கட்சியின் கூட்டங்களில் சில மாற்றங்கள், சில ரகசிய கூட்டங்கள் நடைபெற்று வருகின்றமை பலரும் ஊடகங்களும் அறிந்து ஒரு விடயம்.

இதன் அடிப்படையில் கடந்த 16 ஆம் திகதியன்று வவுனியா இரட்டைப்பெரியகுளம் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டமானது கட்சியின் செயற்பாடுகளுக்கு முரணாகவும், கட்சி யாப்புகளின் அறிவுறுத்தலுக்கு முரணாகவும் தேர்தல் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு எதிராகவும் கூட்டப்பட்ட ஒரு கூட்டமாகும்.

இந்த கூட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர், விவரங்கள் தெளிவில்லாத கூட்டமாக அது காணப்பட்டது. எனவே இந்தக் கூட்டத்திற்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் எம்மால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன் போது எமது தரப்பு சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணிர்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொண்ட நீதிபதி இந்த வழக்குக்கு எதிராளிகளாக நாங்கள் கொடுத்திருந்த கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி உட்பட சில அங்கத்தவர்களுக்கும் அங்கு அந்த கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அங்கத்தவர்கள் அல்லாதவர்களுக்கும் இடைக்கால தடை உத்தரவினை வழங்குவதற்கான அழைப்பாணையை நீதிமன்றம் விடுத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியானது ஒரு பாரம்பரிய கட்சி. இக்கட்சியில் கடந்த சில காலமாக மிகப்பெரிய இடையூறுகள், இடைஞ்சல்கள், கட்சியின் கூட்டங்களில் பெரும் குழப்பங்கள் இடம் பெற்று வந்தமை அனைவரும் அறிந்த ஒரு விடயமே.

ஒவ்வொரு ஆண்டும் அல்லது ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை மத்திய குழுக்கள் பொதுக்குழுக்கள் கூட்டப்படுவதும், ஏற்படுத்தப்பட்ட அந்த குழுக்களின் அல்லது அந்த மத்திய குழுவினுடைய செயல்பாடுகள் மிக சாத்தியமற்ற முறையில் அல்லது அதனை ஒழுங்கு முறையாக நடைபெற முடியாத அளவுக்கு சில தடைகள் இடையூறுகள் ஏற்பட்டு வந்தமையும் பலரும் அறிந்ததுதான்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை அபகரித்துச் செல்ல அல்லது எடுத்துச் செல்ல பல அரசியல் வியாபாரிகள் முன்வந்திருப்பது இன்று பலரும் அறிந்து ஒரு விடயம்தான். தமிழர் விடுதலைக் கூட்டணி என்பது ஒரு சாதாரண கட்சி அல்ல. ஒரு பாரம்பரிய முக்கிய கட்சி. தந்தை செல்வா உட்பட பெரும் தலைவர்களால் வழிநடத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட ஒரு தொன்மையான கட்சி.

இந்த கட்சியினை அவ்வளவு வெகு விரைவில் யாரும் எடுத்துச் செல்வதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கத்தவர்கள் யாரும் ஒருபோதும் இடம் அளிக்க மாட்டார்கள். இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்பட்டிருக்கின்ற இந்த இடைவெளிகளை அல்லது அங்கு ஏற்பட்டுள்ள உட்பூசல்களைச் சாதகமாகப் பாவித்துக் கொண்டு சில அரசியல் வியாபாரிகள் கட்சியினுள் புகுந்து கட்சியை அபகரிக்க முயற்சி எடுப்பது மிகவும் வருத்தத்திற்குரிய விடயமாகும்.

எனவே எவ்வளவுதான் இவர்கள் முயன்றாலும் கட்சியில் தற்போது இருக்கின்ற இந்த அங்கீகரிக்கப்பட்ட மத்திய குழு ஒருபோதும் இவ்வாறான வியாபாரிகளுக்கு அங்கு இடம் அளிக்கப் போவதில்லை. அதேவேளை கட்சியின் செயல்பாடுகளின் காரணமாக அதிர்ச்சியான மனநிலைகளில் வெளிநாடுகளில் அல்லது வெளியிடங்களில் இலங்கையில் கூட இருந்துகொண்டு கட்சி அலுவலகத்திற்கு கூட வர முடியாத நிலையில் இருக்கின்ற கட்சியின் உறுப்பினர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடம் அளிக்க மாட்டார்கள். இந்த அரசியல் வியாபாரிகள் நினைப்பது நிச்சயமாக நடைபெறாது என்பதையும் கூறிக் கொள்ள விரும்கின்றோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்றும் சோர்ந்து போய்விடவில்லை. அதனுடைய ஒவ்வொரு அங்கத்தவரும், ஒவ்வொரு ஆயுள் கால உறுப்பினரும், ஒவ்வொரு உறுப்பினரும் இந்தக் கட்சியின் பாதுகாப்பிற்காக என்றைக்குமே தங்களுடைய பங்களிப்பை வழங்குவதற்கு எப்பொழுதுமே தயாராகவே இருக்கின்றார்கள்.

சமீபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினுடைய சொத்துக்கள் மற்றும் இருப்புகளைப் பலர் விலை பேசி வருகின்றனர் எனவும், சில சில சொத்துக்கள் விலை போய் இருக்கின்றன எனவும் அறியக் கிடைத்திருக்கின்றது.

கட்சிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்ற நிலையில் நீங்கள் யாரும் கட்சியினுடைய எந்தச்சொத்துகளையும் வாங்கவோ அல்லது அதற்கான உடன்படிக்கையைச் செய்யவோ முன் வரவேண்டாம் என்று தாழ்மையாக கேட்டுக் கொள்கிறோம். – என்றார்.




# ஹிங்குராங்கொட விமான நிலையத்தை மறுசீரமைக்கும் நடவடிக்கை விரைவில்!

இரண்டாம் உலகப் போருக்கு முந்தைய வரலாற்று சிறப்பு மிக்க ஹிங்குராங்கொட உள்நாட்டு விமான நிலையத்தை மறுசீரமைக்கும் திட்டத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

ஆரம்பத்தில் "சுயுகு மின்னேரியா" என அழைக்கப்பட்ட இந்த விமான நிலையம் இரண்டாம் உலகப் போரின் போது இங்கிலாந்தின் றோயல் விமானப்படைக்கு ஒரு மூலோபாயத் தளமாகச் செயல்பட்டது.

2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஹிங்குராங்கொடை சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக இரண்டு பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

விமான நிலைய அபிவிருத்தி பணியில் முதல் கட்டமாக ஓடுபாதையை நீடிப்பதில் கவனம் செலுத்தப்படும். தற்போது 2287 மீட்டர் நீளமும், 46 மீட்டர் அகலமும் கொண்ட இந்த ஓடுபாதை மொத்தம் 2500 மீட்டர் நீளத்திற்கு விரிவுபடுத்தப்படும்.

இதனை அபிவிருத்தி செய்வதால் விமான நிலையத்தில் பிரபலமான ஏர்பஸ் ஏ320 மற்றும் போயிங் பி737 மாடல்கள் உட்பட பெரிய விமானங்கள் வருகை தர இடமளிக்கும்.

விரிவான நவீனமயமாக்கல் திட்டத்திற்கு மொத்தம் 17 பில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் சுற்றுச்சூழலைப் பேண பொலிஸார் விசேட நடவடிக்கை

## மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்குமாகாணத்தில்உள்ளபொலிஸ், உள்ளூராட்சி அதிகாரிகள் மற்றும் சமூகத்தின் ஒத்துழைப்புடன் அடுத்த சில நாள்களில் மாகாணத்தில் சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தும் விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ. தனபால தெரிவித்தார்

எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்தில் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் நபர்களுக்கு எதிரான சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளதாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வடக்கு மாகாணத்தை உருவாக்குவது தனது நம்பிக்கையாகவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இனிவரும் நாட்களில் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இந்த நடைமுறை இறுக்கமாக்கப்படும் என்பதுடன் பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.



# அக்குபஞ்சர் சிகிச்சை நிலையத்தை உடனடியாகவே மூடுமாறு பணிப்புரை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாண பிறவுண் வீதியில் நடத்தப்பட்டு வந்த அக்குபஞ்சர் சிகிச்சை நிலையத்தை உடனடியாக மூடுமாறு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் உத்தரவிட்டுள்ளார்.

சிகிச்சை நிலையத்தை யாழ்ப்பாணம் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி, உணவு மற்றும் மருந்துப் பாதுகாப்பு அதிகாரசபை உள்ளிட்ட குழுவினர் ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது எந்த விதமான பதிவும் மேற்கொள்ளப்படாமலேயே இந்த அக்குபஞ்சர் சிகிச்சை நிலையம் இயங்கியதோடு சிகிச்சையளித்தவர் எந்த மருத்துவ தகுதியையும் கொண்டிருக்காதமையும் தெரிய வந்ததாக மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு அறிக்கையிடப்பட்டது.

அறிக்கையை ஆராய்ந்த மாகாணப் பணிப்பாளர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார் எனத் தெரிகின்றது.




# பொருளாதார ரீதியாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அரசியல் கட்சி அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"கட்சிகழ்லின் தேவைக்கேற்ப நாட்டின் பொருளாதாரத்தை உருவாக்கவன்றி பொருளாதார ரீதியாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே இந்நாட்டில் அரசியல் கட்சி அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். கட்சிகளின் விருப்பத்திற்கேற்ப நாட்டின் பொருளாதாரத்தை கொண்டு சென்றதால் நாடு பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிட்டது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அனுராதபுரம் மாவட்ட சட்டத்தரணிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இங்கு பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக நான் இங்கு வரவில்லை. ஜனாதிபதியாக உங்கள் அனைவருக்காகவும் பணியாற்றுகின்றேன். இப்போது நாம் பாரம்பரியமாக நினைத்த காலம் முடிந்துவிட்டது. பாரம்பரிய அரசியலின் காரணமாகவே இந்த இக்கட்டான சூழலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதிலிருந்து நாம் வெளியேற வேண்டும்.

நாட்டின் தேவைக்கேற்ப கட்சி அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும். கட்சி அமைப்பின் விருப்பப்படி நாட்டை கட்டியெழுப்ப முடியாது. அதைச் செய்யப் போனதால்தான் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதனை யாரும் பொறுப்பேற்கவில்லை. கடைசிவரை யாரும் ஆட்சி அமைக்க முன்வரவில்லை.

இது குறித்து முக்கிய கட்சிகள் ஒன்று கூடி கலந்துரையாடுவது நல்லது என்று நான் நம்புகிறேன். பழைய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் அடிப்படையில் கிராமங்கள் கட்டியெழுப்பப்பட்டன. ஆனால் தற்போது பல புதிய கட்சிகள் உருவாகியுள்ளன. அடுத்த தேர்தலில் இதெல்லாம் மாறலாம். கட்சிகளைப் பற்றி சிந்திக்காமல் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். இல்லையேல் பிரிவுதான் ஏற்படும்.

மிகவும் மோசமான காலகட்டத்தை கடந்து வந்துள்ளோம். எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வீதியில் அடித்துக் கொல்லப்பட்டார். அந்த நிலைக்கு நாம் திரும்ப வேண்டுமா என்று எல்லோரிடமும் கேட்க விரும்புகிறேன்.

இதற்கு சில அரசியல்வாதிகளும் அங்கீகாரம் அளித்துள்ளனர். மனித உரிமைக்காக நிற்கும் சட்டத்தரணிகள் சங்கம் கூட இதைக் கண்டிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அன்று கொல்லப்பட்டார். இந்த நாட்டில் ஜனநாயகம் எங்கிருந்தது என்பதை இன்று நாம் மறந்துவிட்டோம். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவர் பிரதமராக வேண்டும். இல்லையெனில், வேறு யாராவது பிரதமராகலாம்.

பிரதமரின் வீட்டை எரித்துவிட்டு வெளியேறச் சொன்னால், எதிர்க்கட்சிகள் பிரதமரை இராஜினாமா செய்யச் சொன்னால், நாட்டில் ஜனநாயகம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இங்கிலாந்து போன்ற நாட்டில் இது நடந்தால் என்ன நடக்கும், எனவே இப்போது நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டும்.

அதன்படி, ஒரு கட்சி யாருக்காவது பிரச்சினை ஏற்பட்டால், அதைக் கண்டிக்க வேண்டும். எதிரணியில் இருந்த குமார வெல்கமவையும் காருக்குள் ஏற்றி, சிலர் தீவைக்க முயன்றபோது அங்கிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றினார்கள். அவர் திருடனும் அல்லர். கொலைகாரரும் அல்லர்.


எனவே, நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். அதன்போது நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். திருடர்களைத் தண்டிப்போம் என சில தரப்பினர் கூறுகின்றனர். நாங்கள் திருட்டுக்கு எதிரானவர்கள். ஆனால் கட்சியிகளுக்கு அவர்களை தண்டிக்க முடியாது.

திருடர்களை கண்டுபிடித்து நீதிமன்றத்தில் நிறுத்துவோம் என்று கூறுவது சரிதான். மேலும், ஒன்லைன் சட்டமூலம் கொண்டு வரும்போது ஜனநாயகம் பறிபோகும் என்றும் கூறப்படுகிறது. எனவே, இந்த பழைய அரசியலை விட்டுவிட வேண்டும்.

நாம் அனைவரும் புதிதாகச் சிந்திக்க வேண்டும். கடந்த காலத்தில் நாட்டின் ஜனநாயகம் ஆட்டம் கண்டது. எனவே, நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகத்தை சரியான பாதையில் கொண்டு சென்று நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன்." – என்றார்.







# நாட்டை வெற்றியடையச் செய்யும் பொறுப்பு இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

## ஜனாதிபதி கூறுகிறார்

“நவீன விவசாயம், சுற்றுலா மற்றும் வலுசக்தித் துறைகளில் பரிவர்த்தனை ரீதியிலான மாற்றத்துடன் 2048ஆம் ஆண்டளவில் வளமான இலங்கையை கட்டியெழுப்பும் பயணத்தை அரசாங்கம் தற்போது ஆரம்பித்துள்ளது. அந்தப் பயணத்துடன் முன்னோக்கிச் சென்று நாட்டை வெற்றியடையச் செய்யும் பொறுப்பு இளைஞர்களிடம் உள்ளது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற “என்னில் இருந்து ஆரம்பிப்போம்” அனுராதபுரம் மாவட்ட இளைஞர் மாநாட்டில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூம்பிச்சாங்குளம் அருகில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டு தமது பிரச்சினைகள் பலவற்றை ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

அவற்றில் பல பிரச்சினைகளுக்கு அந்த இடத்திலேயே தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி, ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

இங்கு எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி, பரீட்சை திணைக்களத்தின் சான்றிதழுக்கு வாழ்க்கை தோல்வியடைய அனுமதிக்கப் போவதில்லை என்றும் கட்டியெழுப்பப்படும் இலங்கையில் எதிர்காலத்தில் இளைஞர், யுவதிகளுக்கு பல தொழில் வாய்ப்புகளை உருவாக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று எதிர்காலத்தில் கல்விப்பொது சாதாரண தர சான்றிதழ் காரணமாக பதின்மூன்று வருட கல்வி நிறுத்தப்படாது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சீர்திருத்த வேலைத்திட்டம் குறித்து இளைஞர்களுக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சட்டப்பூர்வமாக்கி நாட்டிற்கு நிவாரணம் வழங்குவதுடன், பொருளாதார மறுசீரமைப்பு சட்டமும் இந்த மே மாதம் முன்வைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையின் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தை 2042ஆம் ஆண்டு வரை நீடிக்கவும், அந்தக் கடன்களில் ஒரு பகுதியை நீக்கிக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டை முன்னேற்றுவதற்கு ஏற்றுமதிப் பொருளாதாரத்தை விரைவாக நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

நவீன தொழில்நுட்பத்துடன் நாட்டின் இளைஞர்களை வலுவூட்டி நாட்டின் பொருளாதாரத்திற்கு நேரடியாக பங்களிக்கும் வேலைத்திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டுகளாகத் தலைமை வகித்து நடத்துகின்றார். அதனால் இது மாமன் – மருமகன் கட்சிதான்.

ஐக்கிய தேசிய கட்சியைப் பொறுத்த வரை காலங்காலமாக அதன் பிரதான எதிர்க்கட்சி சுதந்திரக் கட்சியே. அதுவே அதன் பரம வைரிக் கட்சி.

அந்த சுதந்திரக் கட்சிக்குத் தான் ஜனாதிபதியானதும் ஜே.ஆர். என்ன செய்தாரோ அதனையே அவரது அரசியல் வாரிசு ரணிலும் இப்போது செய்கின்றார்.

கொழும்பு மருதானை டார்லி வீதியில் உள்ள சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தை பொலிஸார் நேற்று மூடி சீல் வைத்தனர். கட்சியினர் யாரையும் உள்ளே செல்ல அவர்கள் அனுமதிக்கவில்லை.

இதே வேலையைத்தான் ரணிலின் மாமனார் ஜே.ஆர். முன்னர் ஜனாதிபதியாக இருந்து செய்தார்.

அது நடந்தது – என் நினைவு சரி என்றால் – 1982 ஆக இருக்கலாம். அப்போது நான் 'தினபதி' – 'சிந்தாமணி' பத்திரிகைகளின் நீதிமன்றச் செய்தியாளன்.

எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சிக்குள் பிளவு. கட்சித் தலைவி சிறிமாவோ மற்றும் செயலாளர் சூரியாராய்ச்சி (என்று எனக்கு நினைவு) போன்றோர் ஓர் அணி.

மற்றப் பக்கத்தில் சிறிமாவோவின் மகன் அநுரா பண்டாரநாயக்க, மைத்திரிபால சேனநாயக்க, ஸ்டான்லி திலகரட்ன போன்றோர். கட்சிக்குள் இப்போது இருப்பது போல உள் வீட்டு குழப்பம். யார் கட்சியின் உண்மையான தலைவர் என்று இழுபறி.

கட்சித் தலைமையக வாசலில் ஒரு நாள் காலை வேளையில் யாரோ ஒரு கிரனேட்டை வீசி வெடிக்க வைத்தனர். யாரும் காயமடைந்தனரா என்பது எனக்கு நினைவில் இல்லை. கிரனேட் வீச்சு நடவடிக்கை கூட ஜே.ஆரின் வேலை என்றுதான் அப்போது பேசப்பட்டது. கிரனேட் வீச்சைக் காரணம் காட்டி, அதனால் பொது அமைதிக்கு பங்கம் என்று விளக்கம் கூறி, சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தை சீல் வைத்து மூடினர் பொலிஸார். திறப்பை எடுத்துச் சென்று மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். இந்தத் திறப்பை மீளப் பெறுவதற்கான சட்டச் சர்ச்சை கீழ்நிலை நீதிமன்றங்களில் இருந்து மேல்நிலை நீதிமன்றங்கள் வரை சு.கவின் இழுபறியாகத் தொடர்ந்தது. அவை பற்றிய நீதிமன்ற செய்திகளை சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் நான் பரபரப்பாகச் சேகரித்து வழங்கினேன். எமது பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக அவை பிரசுரமான நினைவு எனக்கு இப்போதும் உண்டு.

இப்போது கட்சி அலுவலகத்தில் இருந்து சில ஆவணங்கள் காணாமல் போயின என்ற விடயத்தை வைத்து பொலிஸாரைக் கொண்டு அலுவலகத்தை மூடி சீல் வைத்திருக்கின்றார் ஜே.ஆரின் மருமகன் ரணில்.

அன்று சிறிமாவோவுக்கு ஏற்பட்ட நெருக்கடி இன்று மைத்திரிக்கு.

பௌத்த – சிங்களப் பேரினவாதப் போக்குக் கொண்ட அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை வெளியில் இருந்து கூட்டி வந்து கட்சி அலுவலகத்தில் அண்மையில் கூட்டம் வைத்தார் மைத்திரியார். தமது தலைமையில் அமையும் புதிய அரசியல் கூட்டணியின் சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறக்கும் முனைப்புடன் அவர் இந்த விடயங்களை முன்னெடுத்தார். விஜயதாஸ ராஜபக்ஷ பேரினவாதச் சிந்தனைப் போக்கு உடையவர். அதனால் பௌத்த பிக்குகளின் பெரும் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றவர். அதனால் அந்தக் கூட்டை ஆதரிக்க விமல் வீரவன்ஸ உட்பட ஏனைய பேரினவாத அணியினரும் தயாராகினர்.

மைத்திரியின் இந்த அரசியல் காய் நகர்த்தலே அவருக்கு இப்போது பேரடியாகவும் பேரிடியாகவும் விடயங்கள் அடுத்தடுத்து அரங்கேற வழி செய்திருக்கின்றன. சந்திரிகா தலைமையில் கட்சிக்குள் ஒரு குழு கிளர்ந்தெழவும் இந்தப் போக்கே எண்ணை வார்த்தது.

அவை பற்றிய விவரங்களைப் பின்னர் ஒரு நாள் விலாவாரியாகப் பார்ப்போம்.

## இலங்கை மீனவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று மாரடைப்பு ஏற்பட்டதால் அவருடன் சென்றவர்கள் நடுக்கடலில் உதவி கோரினர். இதனால் அதன் அருகே சென்ற இந்தியக் கடற்படையினர் தகவலை இந்திய விமானப் படையினருக்கு வழங்கினர்.

இதையடுத்து இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஹெலி சம்பவ இடத்துக்கு வந்தது. அதில் இருந்த விமானப் படையினர் மேற்படி இலங்கை மீனவரை மீட்டு சென்னை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

மாரடைப்பால் பாதிக்கப்பட்ட இலங்கை மீனவரின் விபரம் உடனடியாகச் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## என்னை மலினப்படுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவுக்கு எதிரான வழக்கு விவகாரம் கைமீறிப்போயுள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயம்.

இன்னும் எத்தனை பேர் இடையீட்டு மனுக்களைச் செருகுவார்கள், வழக்கு இன்னும் எவ்வளவு காலம் செல்லும் என்று கூற முடியாதுள்ளது. இதைவிடுத்து பல புதிய புதிய வழக்குகளும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிலரை நீதிமன்றத்துக்கு அழைக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் கட்சிக்கு ஆரோக்கியமான நல்ல சூழலை உருவாக்குமா என்று எமக்குத் தென்படவில்லை. ஆகவே, கட்சியின் நிலைமையில் மிகவும் மனக்கவலையுடன் இருக்கின்றோம்.

எங்களுடைய கட்சியைக் கொண்டு செல்வதில் – கட்சியை நிமிர்த்திச் செல்வதில் சுயநலத்தோடு சேர்ந்த சூழ்ச்சிகரமான சில நபர்களுடைய செயற்பாடுகள் நேரடியாக என்னைத் தாக்காவிட்டாலும் மறைமுகமாகத் தாக்குகின்றன. வேறு நபர்களை வைத்து சிறீதரனை மலினப்படுத்துகின்ற விடயங்களை எங்களுடைய கட்சியைச் சார்ந்த சிலர் மிகவும் நூதனமாகக் கைக்கொள்கின்றார்கள் என்பதை நான் நேற்று (நேற்றுமுன்தினம்) நீதிமன்றத்தில் இருந்து அவதானிக்க முடிந்தது." – என்றார்.

## சுதந்திரக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகட்ட விசாரணைகள் நிறைவடையும் வரை சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்குள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது

குறித்த கட்டடத்தில் நேற்று முற்பகல் 9.30 அளவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சகல அமைப்பாளர்களும் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் பொலிஸார் குறித்த கட்டடத்துக்குள் எவரும் செல்வதற்கு அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இருந்த சில ஆவணங்கள் காணாமல்போயுள்ளன என்று முன்னதாக அதன் பதில் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாரதி துஷ்மந்த மித்ரபால பொலிஸாரிடம் முறைப்பாடளித்திருந்தார்.

இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு செல்வதற்குப் பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

அத்துடன், குறித்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் குறித்த கட்டடத்துக்குள் செல்வதற்கு அனுமதிக்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த மித்ரபால கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதேவேளை, அவசர அரசியல் குழுக் கூட்டத்தை நடத்துமாறு கோரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அனுப்பிய கடிதத்துக்கு கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ரபால பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

கட்சியின் தலைவருக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளமையால் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த மித்ரபால, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடையுத்தரவு தொடர்பான கடிதம் தமக்கு இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக இடைக்காலத் தடையுத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து தாம் அறிந்திருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் செயற்படுவதற்குத் தமக்கு சட்டரீதியாக அனுமதியில்லை என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ரபால மேலும் கூறியுள்ளார்.




# வவுனியாப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது துணைவேந்தர் யார்?

## புள்ளிகளின் அடிப்படையில் பேராசிரியர் அற்புதராஜா முன்னிலை

வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கான தெரிவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடப் பேராசிரியர் அ. அற்புதராஜா புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளார்.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரனின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை 13ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்காகக் கடந்த மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

பெரும்பான்மை இனப் பேராசிரியர் ஒருவர் உட்பட நான்கு விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. அவை கடந்த மாதம் இடம்பெற்ற விசேட பேரவைக் கூட்டமொன்றில் சமர்ப்பிக்கப்பட்டபோது, அவற்றில், பெரும்பான்மை இனப் பேராசிரியரின் விண்ணப்பம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கேற்பச் சமர்ப்பிக்கப்படவில்லை என நிராகரிக்கப்பட்டது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூவரும் நேற்று முன்தினம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட பேரவைக் கூட்டத்தில் தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர். அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்கள் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்கினர். பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தின் இலத்திரனியல் மற்றும் மின்னியல் துறைப் பேராசிரியர் அ.அற்புதராஜா முதல் நிலையிலும், வவுனியாப் பல்கலைக்கழகப் பிரயோக விஞ்ஞான பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் திருமதி அனந்தினி நந்தகுமாரன், வியாபாரக் கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் அ. புஸ்பநாதன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின்படி, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக்கழகச் சட்டத்தின்படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்து நியமனம் செய்வார்.

# இவ்வாண்டில் 20 ஆயிரம் பேருக்கு இதுவரை டெங்கு நோய்த் தொற்று



கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் 20 ஆயிரத்து 365 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் அதிகளவான நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, மேல் மாகாணத்தில் 7 ஆயிரத்து 289 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு டெங்கு நோயினால் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேநேரம், மழையுடனான காலப்பகுதியில் டெங்கு நோய் அதிகளவில் பரவும் அபாயம் உள்ளமையினால் மக்கள் தங்கள் வீடுகளைச் சுற்றி துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# யாசகம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



நாட்டில் யாசகம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பேராதனை பல்கலைக்கழக பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிவர ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இலங்கையில் யாசகம் பெறுவோரின் எண்ணிக்கை 57 லட்சத்து 77 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, வருமானமின்மை, தொழில் இன்மை மற்றும் பொருள்களின் விலை அதிகரிப்பு போன்றவை இதற்குக் காரணம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மோடியின் மோசடி!

இந்தியப் பொதுத் தேர்தலை ஒட்டி நடைபெறும் பிரசாரங்களில் தமிழகத்தில் மிக முக்கிய இடத்தைப் பிடித்திருப்பது கச்சதீவு விவகாரமாகும்.

ஏதோ கச்சதீவை இலங்கைக்கு 'சும்மா' தாரை வார்த்தமை மூலம் இந்திய மக்களை அப்போதைய காங்கிரஸ் அரசும், முன்னைய தி.மு.க. மாநில அரசும் ஏமாற்றி விட்டன என்ற கருத்தை இந்தியப் பிரதமர் மோடியிலிருந்து பல தரப்பினரும் பெரும் பீரங்கிப் பிரச்சாரமாக முன்வைத்து வருகின்றனர்.

தவிரவும், இலங்கை - இந்தியக் கடல் எல்லை தொடர்பாக 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் கீழ் கச்சதீவு தரைப்பகுதியை இலங்கை சூறையாடிக் கொண்டு விட்டது என்ற கணக்கில் பிரசாரம் நடக்கின்றது.

இந்தியாவிடம் இருந்து கச்சதீவை ஒருவாறு பிடுங்கிக் கொண்டு, அதைச் சாதகமாக வைத்து இந்திய மீனவர்களை இலங்கைத் தரப்பு துன்புறுத்தி வருகின்றது என்ற படமும் இந்தியாவில் காட்டப்படுகின்றது.

ஆனால், இருநாட்டு கடல் எல்லைகளை வரையறுக்கும் 50 ஆண்டுகளுக்கு முந்திய ஒப்பந்தங்களில்கச்சதீவைஇலங்கைஉத்தியோகபூர்வமாகப் பெற்றுக் கொண்டது என்பது உண்மையானாலும், அது இலங்கைக்கு அன்பளிப்பாக - வெகுமதியாக - கிடைக்கவில்லை, பெரும் இழப்பை பறிகொடுத்துத்தான் அந்தச் சிறிய நிலப்பரப்பை ஏமாளியாக இலங்கை பெற்றது என்பது மறைக்கப்பட்ட இரகசியமாக உள்ளது.

உண்மையில் கச்சதீவை இலங்கைக்கு வழங்கும் விதத்தினாலான அந்த உடன்பாட்டில் பெரும் நஷ்டம் இலங்கைக்குத்தான். அந்த உடன்பாடு மூலம் பெரும் வளத்தை நிரந்தரமாகச் சூறையாடிக் கொண்டது இந்தியாதான்.

இந்த அப்பட்டமான உண்மையை முற்றாக - அடியோடு - மறைத்துத்தான் இப்போது பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை மீனவர்களின் வரலாற்று பாவனையில் இருந்த பெரிய கடல் பிரதேசத்தைத் தன்வசம் சூறையாடிக் கைப்பற்றிக் கொண்டுதான், ஒரு சிறிய நிலப்பரப்பான கச்சதீவு என்ற வளமற்ற மணல்திட்டை இலங்கைக்குப் பிச்சை போடுவது போல தாரைவார்த்தது இந்தியா. அதுதான் உண்மை.

இலங்கை - இந்திய கடல் எல்லை ஒப்பந்தங்களை ஊன்றிக் கவனித்தால் இந்தியாவின் இந்தச் சூறையாடல் அம்பலமாகும். அதை மூடி மறைத்துக்கொண்டுதான் ஏதோ இலங்கைக்கு பெரிய வெகுமானத்தை கச்சதீவு மூலம் இந்தியா தாரை வார்த்தது என்ற கதை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது - குறிப்பாக மோடியின் பா.ஜ.கவினால்.

இந்தியாவின் கன்னியாகுமரிக்கு தெற்கே ஆழ் கடலில் இருக்கும் சுமார் 3000 சதுர மைல்( சுமார் 7 ஆயிரத்து 770 சதுர கிலோ மீட்டர் பிரதேசம்) வேட்ஜ் பாங்க் (Wadge Bank) என்று கூறப்படுகின்றது. இந்தப் பிராந்தியத்தில் மீன் வளமும் ஏனைய கடல்வளங்களும் கொழிக்கும் பிரதேசம் இதுதான். கண்டங்களுக்கு அருகில் வளமிக்க படுக்கையாக இது கருதப்படுகின்றது.

உலகின் இழுவை மீன் வள்ளங்களின் (ட்றோலர்களின்) சிறந்த வெப்ப மண்டல மையமாக இது கடலியலாளர்களால் மதிக்கப்படுகின்றது.

காலாதி காலமாக இலங்கை மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் வளத்தைவாரிவழங்கியகடற்பிரதேசம்இது தான்.

இந்த 3,000 சதுர கிலோமீட்டர் வளம் கொழிக்கும் பிரதேசத்தில் மீன்பிடிக்கும் இலங்கை மீனவரின் வரலாற்றுக் கால உரிமையை அடியோடு, பறி கொடுத்துத்தான் - நிரந்தரமாகவே தாரை வார்த்துத்தான் - சுமார் 2 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பு கொண்ட கச்சதீவை இலங்கை தக்க வைத்துக் கொண்டது என்பதுதான் உண்மை.

இலங்கையர்கள் தமது மீன்பிடிக்கும் உரிமையைப் பறிகொடுத்த அந்த வளம் மிக்க வேட்ஜ் பாங்க் கடற்படுக்கையில் எரிபொருள், எரிவாயு மற்றும் ஹைட்ரோ கார்பன் கனிமங்களின் அகழ்வுக்கான சர்வ தேச கேள்விப் பத்திர விலைகோரல்களை இந்தியா இந்த ஜனவரியில் வெளியிட்டு அதற்கான நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது.

அப்படி இலங்கையிடமிருந்து தான் பிடுங்கிய மிக அகண்ட - வளம் நிறைந்த - கடற் படுக்கையில் பெரும் செல்வத்தை - வளத்தை - தோண்டி எடுப்பதற்கான ஏற்பாடுகளை ஒருபுறம் செய்து கொண்டுதான், மறுபுறம் கச்சதீவை ஏதோ சும்மா இலங்கைக்குத் தாரை வார்த்ததாக அரசியல் 'பீலா' விடுகின்றார் இந்திய பிரதமர் மோடி. இப்படி உண்மையை மறைத்து சின்னத்தன்மான அரசியல் பிரச்சாரத்தை முன் வைப்பதும் ஒருவகையில் அரசியல் மோசடிதான்.

# தேர்தல்களுக்கு இடையூறு ஏற்படுத்த சீனா திட்டமிட்டுள்ளதென எச்சரிக்கை



உலகம் முழுவதும் இந்தியா உட்பட 60 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தேர்தல் நடைபெற கூடும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் சீனா தேர்தல்களுக்கு இடையூறு ஏற்படுத்த திட்டமிட்டுள்ளதாக மைக்ரோசாப்ட் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு, பிரதானமாக இந்தியா, அமெரிக்கா மற்றும் தென்கொரியாவில் நடைபெற உள்ள தேர்தல்களில் இடையூறு ஏற்படுத்துவதற்கு சீனா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மைக்ரோசாப்டின் அச்சுறுத்தலை கண்டறிவதற்கான நுண்ணறிவு குழு கூறும் தகவலின்படி, சீனாவின் சைபர் குழுக்கள், வடகொரியா தொடர்புடன், 2024 ஆம் ஆண்டு நடைபெறும் பல்வேறு தேர்தல்களை இலக்காக கொண்டு செயல்பட கூடும் என தெரியவந்துள்ளது.

அதன்போது, சீனா, தங்களுக்கு சாதகம் ஏற்படும் வகையில், பொது மக்களின் கருத்துகளை மெல்ல சமூக ஊடகம் வழியே பரப்பி விடுவதற்காக, செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட செய்திகளை அள்ளி குவிக்குமென்று மைக்ரோசாப்ட் எச்சரித்துள்ளது.

அத்துடன், சீனாவின் இந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நாடுகள் உலக மக்கள் தொகையில் கூட்டாக 49 சதவீதம் அளவுக்கு பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜேம்ஸ் அண்டர்சனுடன் இணைந்து கிரிக்கெட் விளையாடினார் ரிஷி சுனக்







பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் இங்கிலாந்து அணி வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சனுடன் இணைந்து கிரிக்கெட் விளையாடும் காணொலி வைரலாகி வருகின்றது.

பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் கிரிக்கெட்டை அதிகம் விரும்பக் கூடியவர்.

இந்த நிலையில், இங்கிலாந்து அணி வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சனை பிரதமர் ரிஷி சுனக் சந்தித்துப் பேசியுள்ளார்.

அப்போது அண்டர்சன் பந்து வீச ரிஷி சுனக் துடுப்பெடுத்தாடி வலை பயிற்சியிலும் ஈடுபட்டுள்ளார்.

அதன் போது ஜேம்ஸ் அண்டர்சன் வீசிய பந்துக்கு ரிஷி சுனக் ஆட்டமிழக்க, அண்டர்சனுக்கு பாரராட்டும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான காணொலியை பிரதமர் ரிஷி சுனக் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இந்த காணொலியானது தற்போது வைரலாகி வருகின்றது.





# இஸ்ரேலின் வான் தாக்குதலுக்கு நிச்சயம் பதிலடி வழங்கப்படும்

## ஈரான் எச்சரிக்கை

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலுக்கு நிச்சயம் பதிலடி வழங்குவோம் என ஈரான் எச்சரித்துள்ளது.

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது கடந்த திங்கட்கிழமை இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஈரான் இராணுவத்தின் மூத்த தளபதிகள் இருவர் உட்பட 16 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என அமெரிக்க பாதுகாப்புத்துறை தெரிவித்திருந்தது. எனினும் சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீதான தாக்குதலுக்கு நிச்சயம் பழி தீர்ப்போம் என ஈரான் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க அல்லது இஸ்ரேல் நாட்டு தூதரகங்கள் மற்றும் இராணுவ முகாம்கள் மீது அடுத்த வாரத்துக்குள் ஈரான் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# பா.ஜ.க - பா.ம.க கூட்டணி காலத்தின் கட்டாயமானது

## அன்புமணி ராமதாஸ் தெரிவிப்பு




“பா.ம.கவுக்கு வாக்களித்து வெற்றி பெற செய்தால் தமிழகத்தில் 2026 இல் தி.மு.க, அ.தி.மு.க. இல்லாத கூட்டணி ஆட்சி அமையும்.”

– இவ்வாறு செய்யாறில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

ஆரணி மக்களவைத் தொகுதியின் பா.ம.க. வேட்பாளர் கணேஷ்குமாரை ஆதரித்து பிரச்சார பொதுக்கூட்டம் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் நேற்று இரவு நடைபெற்றது. இதன்போது பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் சிறப்புரையாற்றினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“திருவண்ணாமலை மாவட்டத்தை பிரிக்க வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கையை நிறுவனர் ராமதாஸ் வைத்து வருகிறார். நிர்வாகத்துக்கு ஏதுவாக பிரிக்க வேண்டும். ஆனால், அமைச்சர் எ.வ.வேலு தடையாக உள்ளார். திருவண்ணாமலை மாவட்டத்துக்கு கடந்த தேர்தலில் பிரச்சாரம் செய்தபோது, 13 வாக்குறுதிகளை முதல்வர் ஸ்டாலின் கொடுத்துள்ளார்.

கோரிக்கையைநிறைவேற்றாததி.மு.கவுக்குஏன்வாக்களிக்க வேண்டும். மக்கள் நலனுக்காக ஐ.நா. மன்றத்தில் பேசிய பா.ம.க. வேட்பாளர் கணேஷ்குமாருக்கு வாக்களியுங்கள். தமிழகத்தில் அதிக போதை பொருள் புழக்கத்தில் உள்ள மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டமாகும். போதை பழக்கத்துக்கு அடிமையாகி இளைஞர்கள் சீரழிந்துள்ளனர்.

சாராயத்தை கொடுத்து 3 தலைமுறையை நாசப்படுத்திவிட்டனர். போதை இல்லாத, மது இல்லாத தமிழகம் இருக்க வேண்டும். அமெரிக்காவில் கிடைக்கும் போதை, இங்கு கிடைக்கிறது. 57 ஆண்டுகள் இரு திராவிட கட்சிகள் ஆட்சி செய்தது போதும். ஸ்டாலின் மற்றும் பழனிசாமிக்கு தொலைநோக்கு சிந்தனை உள்ளதா?. எந்த நல்லதையும் அவர்கள் கொண்டுவரவில்லை.

இரு கட்சிகளும் காலாவதியான கட்சிகள். அதனால் தான், பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்தோம். இது காலத்தின் கட்டாயம். பா.ம.க. வேட்பாளரை வெற்றி பெற செய்தால், தமிழகத்தில் 2026 இல் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. இல்லாத கூட்டணி ஆட்சி அமையும். மூன்றவாது முறையாக மோடி பிரதமராக வருவார்.” – என்றார்.

# மத்தியில் நாம் நிதி கேட்பதை பிச்சை போல நினைக்கின்றனர்

## கனிமொழி கொந்தளிப்பு





“டில்லியில் இன்றும் ஆதார விலை கேட்டு போராடும் விவசாயிகள் மீது தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மக்களுக்கு எதிரான சட்டங்கள் கொண்டு வந்ததற்கு ஆதரவு தெரிவித்தவர் எடப்பாடி பழனிச்சாமி.”

– இவ்வாறு கனிமொழி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மக்களவைத் தொகுதி இண்டியா கூட்டணி தி.மு.க. வேட்பாளர் கனிமொழி ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தோழப்பன்பண்ணை ஊராட்சியில் வாக்கு சேகரித்தார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

“தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் இதுவரை பார்க்காத அளவுக்கு மழை வெள்ளத்தை மக்கள் சந்தித்தனர். அவர்களுக்கு நிவாரண பொருட்கள், நிவாரண நிதி, வீடு இழந்தவர்கள் வீடு கட்டுவதற்கு 4 லட்சம் ரூபா ஆகிய வற்றை முதல்வர் ஸ்டாலின் வழங்கியுள்ளார். விவசாயிகள் ஆடு மாடு இழந்தவர்கள் என எல்லாருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், பிரதமர் இதுவரை தமிழகத்துக்கு நிவாரண நிதி கொடுக்கவில்லை. நிவாரணம் வேண்டும் எனக் கேட்டபோது மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தூத்துக்குடி முழுவதும் பார்வையிட்டு சென்றார். ஆனால், நாம் நிதி கேட்பது பிச்சை கேட்பது போல் நினைக்கின்றனர். அதனை மாற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

நமது வரியெல்லாம் வாங்கி செல்கின்றனர். தமிழகத்துக்கு எந்த நிதியும் கொடுக்க மாட்டார்கள். உத்தரப் பிரதேசத்துக்கு இரண்டு மடங்கு அதிகமாகக் கொடுக்கின்றனர். மழை வெள்ளத்தில் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால், தேர்தல் வந்தவுடன் திரும்பத் திரும்ப வருகிறார்கள். தமிழகத்தில் யாரும் வாக்களிக்க போவதில்லை என்று அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

100 நாள் வேலை முறையாக கிடைப்பதில்லை. இண்டியா கூட்டணி மத்தியில் ஆட்சிக்கு வந்ததும் 100 நாள் வேலையை 150 நாளாக ஆக்குவோம். சம்பளம் 400 ரூபாவாக உயர்த்தி வழங்கப்படும். இவையனைத்தும் காங்கிரஸ் மற்றும் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இண்டியா கூட்டணி ஆட்சிக்கு வந்தவுடன் சுங்கச்சாவடி மூடப்படும். இவற்றை செய்ய வேண்டும் என்றால், உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். டெல்லியில் தற்போதும் ஆதார விலை வேண்டும் என்று கோரிக்கை வைத்த விவசாயிகள் மீது தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மக்களுக்கு எதிரான சட்டங்கள் கொண்டு வந்ததற்கு ஆதரவு தெரிவித்தவர் எடப்பாடி பழனிச்சாமி.” – என்றார்.




# ஜனாதிபதி தலைமையில் தேசியப் புத்தரிசி விழா

தேசியப் புத்தரிசி விழா நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அனுராதபுரத்தின் வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீமஹாபோதிக்கு அருகில் இடம்பெற்றது.

பாரம்பரியமாக பெரும் போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை ஜயஸ்ரீ மஹாபோதிக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்தப் புத்தரிசி விழா, அடமஸ்தானாதிபதி வண. பல்லேகம ஹேமரதன தேரரின் ஆலோசனைக்கு அமைவாக விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தினால் 57 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னர் காலத்தில் இருந்து நடைபெற்று வரும் இந்த சம்பிரதாயத்திற்கு நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான விவசாயிகள் திரண்டு வந்து, “மழை, விளைநிலங்கள் செழிக்க” வேண்டியும், விவசாயத்தில் நாடு தன்னிறைவு அடைந்து வளமான பொருளாதாரம் ஏற்பட வேண்டியும் பிரார்த்தனை செய்தனர்.

அடமஸ்தானாதிபதி வண. பல்லேகம ஹேமரதன நாயக்க தேரர், தங்கப் பாத்திரத்தில் புத்தரிசியை நிரப்ப ஆரம்பித்ததுடன், மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்துக்கு மத்தியில் தங்கப் பாத்திரத்தில் அரிசியை நிரப்பும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார்.

தேசியப் புத்தரிசி விழாவின் நினைவுப் பதிப்பும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. அநுராதபுரம் மாவட்ட விவசாய அமைப்பின் தலைவர் புஞ்சிரால விவசாயி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விவசாயப் பிரேரணையை முன்வைத்தார். ஆதிவாசித் தலைவர் வன்னில எத்தோ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தேன் வழங்கினார்.

அடமஸ்தானாதிபதி கண்டி களவிய பிரதம சங்கநாயக பூஜ்ய பல்லேகம ஹேமரதன நாயக்க தேரர் இங்கு விசேட அனுசாசனை உரை நிகழ்த்தினார். விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவும் இதன்போது கருத்துத் தெரிவித்தார்.














# திரைத்துறைக் கலைஞர்களுக்கு விசேட கடன் வழங்கும் திட்டம்

திரைத்துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் நலனுக்காக விசேட கடன் திட்டம் ஒன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச். எஸ். சமரதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

திரையுலகம் மற்றும் கலைஞர்களின் முன்னேற்றத்திற்கு ஏற்ற முன்மொழிவுகளை தயாரித்து அரசாங்கத்திடம் வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை சினிமாவை நவீன உலகிற்கு ஏற்றவாறு புதுப்பித்தல் மற்றும் அந்த துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் தொழில்சார் எதிர்காலத்தை பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

திரைத்துறையில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

1993ஆம் ஆண்டு முதல், கலைஞர்களுக்கான ஓய்வூதியம் தொடர்பில் திருப்தியடைய முடியவில்லை எனவும் பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச். எஸ். சமரதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே, அந்த ஓய்வூதியம் தொடர்பாக முடிவெடுப்பதற்கான யோசனைகளை அரசாங்கத்திடம் முன்வைக்க எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.















# உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் இந்த மாத இறுதியில் மக்களின் பாவனைக்கு!

தேசிய மின்கட்டமைப்பிற்கு 120 மெகாவோட் கொள்ளளவைச் சேர்க்கும் உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் இந்த மாத இறுதியில் மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்படவுள்ளது.

2011 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்காக 513 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக நீர்பாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தின் மூலம் ஊவா மாகாணத்தில் உள்ள பல வயல் நிலங்களுக்கு நீர்பாசனம் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதுளை மற்றும் மொனராகலைப் பகுதி மக்களுக்கும் இதன்மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்பாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

# 4 வயது பூர்த்தியான ஒவ்வொரு பிள்ளையும் முன்பள்ளிக் கல்வியை பெறுவது கட்டாயம்

நான்கு வயது பூர்த்தியான ஒவ்வொரு பிள்ளையும் அடுத்த வருடம் முதல் முன்பள்ளிக் கல்வியைப் பெறுவது கட்டாயமாக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு, டட்லி சேனாநாயக்க வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இடவசதி உள்ள மற்றும் மூடப்பட்டிருக்கும் அனைத்து பாடசாலைகளிலும் முன்பள்ளி சிறுவர்களுக்கு வகுப்பறைகள் ஒதுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.



# கொங்ரீட் வளையம் சரிந்து மாணவன் பலி: ஐவருக்கு ஏப்ரல் 10 வரை விளக்கமறியல்!



ஹட்டன் – மஸ்கெலியாவில் கொங்ரீட் வளையம் சரிந்து மாணவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் மாவட்ட நீதிவான் நெரூர் உத்தரவிட்டுள்ளார்.

மஸ்கெலிய – காட்மோரிலுள்ள பாடசாலை வளாகத்துக்குள் அனுமதியின்றி கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்த கொங்ரீட் வளையம் சரிந்து 11 வயதான மாணவன் உயிரிழந்ததுடன், சம்பவம் தொடர்பில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காட்மோரிலுள்ள பாடசாலையொன்றில் 6 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவனே உயிரிழந்துள்ளார்.

கட்டுமானப் பணிகளுக்காகக் கொண்டுவரப்பட்ட கொங்ரீட் வளையம் சரிந்ததில் அதற்குள் சிக்கி கடந்த வியாழக்கிழமை மேற்படி மாணவன் உயிரிழந்துள்ளார்.

மஸ்கெலிய பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




## இலங்கையில் இருந்து கடத்தி செல்லப்பட்டு

# தனுஷ்கோடி கடலில் வீசப்பட்ட 5 கிலோ கடத்தல் தங்கம் மீட்பு

(மன்னார் நிருபர்)

இலங்கையில் இருந்து சட்டவிரோத மாக கடல் வழியாக படகில் கடத்தி செல்லப்பட்ட சுமார் 5 கிலோ எடை கொண்ட தங்கக் கட்டிகள் அடங்கிய பொதி கடலுக்கு அடியில் இருந்து கைப் பற்றப்பட்டுள்ள நிலையில் அதனை இலங்கையிலிருந்து கடத்திச் சென்ற மூவரை கைது செய்து மத்திய வருவாய்ப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ் கோடி இலங்கைக்கு மிக அருகே உள்ள தால் இலங்கையிலிருந்து படகு மூலம் சமீப காலமாக அப்பகுதி ஊடாக தமிழகத்திற்குள் அதிக அளவு தங்கம் கடத்தி செல்லப்படுகின்றது.

இதையடுத்து இந்திய – இலங்கை சர்வதேச கடல் எல்லைப் பகுதியில் சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக் கவும், அந்நிய ஊடுருவலைக் கண் காணிக்கவும், இந்திய கடலோரக் கடற் படை, இந்தியக் கடற்படை மற்றும் சுங்கத்துறை என பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வியாழக்கிழமை அதிகாலை இலங்கையிலிருந்து படகில் தங்கம் கடத்தி வரப்படுவதாக மத்திய வருவாய்ப் புலனாய்வுத் துறை அதி காரிகளுக்கு கிடைத்திரகசிய தகவலின் அடிப்படையில் மண்டபம் கடலோர காவல் படையினருடன் இணைந்து மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் மன்னார் வளைகுடாக் கடல் பகுதியில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது வேதாளை அடுத்த சிங்கி வலை குச்சு அருகே மன்னார் வளை குடாக் கடல் பகுதியில் அமைந்துள்ள முயல் தீவுக்கும் மணாலி தீவுக்கும் இடையே உள்ள கடல் பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண் டிருந்த படகைச் சுற்றி வளைக்க முயன்ற போது படகில் இருந்த நபர்கள் கடலில் ஒரு பொதியைத் தூக்கி வீசி விட்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றனர்.

இதையடுத்து மத்திய வருவாய்த் துறை, புலனாய்வுத்துறை அதிகாரிகள் அவர்களை மடக்கிப் பிடித்து விசாரணை செய்ததில் அவர்கள் வேதாளை பகுதி யைச் சேர்ந்த ஹாஜா செரீப், ஹம்துன் திஸ்தர், ஹெரோஸ் அலி என்பது தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட மூவரையும் பட குடன் மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் மண்டபம் கடலோரக் காவல்படை முகாமிற்கு அழைத்து சென்று அங்கு வைத்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் தாங்கள் இலங் கையில் இருந்து படகில் தங்கக் கட்டி களை கடத்தி வந்தனர் எனவும் அதிகாரி களைக் கண்டதும் கடலில் வீசினர் எனவும், கடலில் பார்சலை வீசிய இடத்தை ஜி.பி.எஸ் கருவியைக் கொண்டு அடையாளப்படுத்தி வைத்துள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர் என்று விசாரணை அதிகாரி கூறினார்.

அதன் அடிப்படையில் வியாழன் மாலை வரை தங்கத்தைக் கடலுக்கு அடியில் தேடியும் அது கிடைக்காததால் நேற்று முன்தினம் வெள்ளி காலை முதல் தொடர்ந்து கடலுக்கு அடியில் ஸ்கூபா வீரர்கள் உதவியுடன் தங்கம் அடங்கிய பொதியைத் தேடி வந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் கடலில் வீசப் பட்ட தங்கம் அடங்கிய பொதி கிடைத் ததையடுத்து தங்கக் கட்டிகளை இந்தி யக் கடலோரக் காவல்படை மண்டபம் முகாமுக்கு எடுத்து சென்று எடை போட்டு பார்த்ததில் அதில் 5 கிலோ தங்கம் இருந்தது தெரிய வந்தது. இதன் இந்திய மதிப்பு சுமார் 3 கோடி ரூபாயாக இருக் கலாம் என மத்திய வருவாய் துறை அதிகாரி தெரிவித்துள்ளனர்.

மேலும் தங்கம் யாருக்காக இலங் கையில் இருந்து கடத்தி வரப்பட்டது என்பது குறித்து கைது செய்யப்பட்ட மூவரிடம் தொடர்ந்து விசாரணை நடத் தப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரி விக்கின்றனர்.












# இலங்கைக்கான பயண ஆலோசனையை திருத்தி அமைத்தது பிரித்தானியா அரசு!

இலங்கை தற்போது அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தினால், தமது பிரஜைகளுக்கு வெளியிட்டிருந்த இலங்கைக்கான பயண ஆலோசனையில் பிரித்தானியா திருத்தம் மேற்கொண்டுள்ளது.

அவசரகால மருத்துவச் சேவைகளுக்கான அணுகல், நாட்டிற்குள் நுழையும் போது பாதுகாப்புத் தேவைகள், வீதிப் பாதுகாப்பு, நாட்டின் பாதுகாப்பு நிலைமை மற்றும் சுகாதார வசதிகளுக்கான அணுகல் ஆகிய விடயங்களில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தகவல்களை பிரித்தானியா மாற்றியுள்ளது.

அதற்கமைய உணவு, எரிபொருள் மற்றும் மருந்துத் தட்டுப்பாடு குறித்து முந்தைய ஆலோசனையில் காணப்பட்ட தகவல்கள் இந்த திருத்தப்பட்ட பயண ஆலோசனையில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

இதனைத் தவிர, மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை போன்ற சுகாதார சேவைகளில் உள்ள சவால்களும் நீக்கப்பட்டுள்ளன.

ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 53 ஆயிரத்து 928 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.



# அக்கரைப்பற்றில் சுகாதாரத் தரப்பினரால் தயிர் வியாபாரிகளுக்கு நேரில் எச்சரிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத் திற்குட்பட்ட அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் அக்கரைப்பற்று பிரதான வீதிகளில் விற்கப்படும் தயிர்க்கடைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது தயாரிப்பு மற்றும் காலாவதியாகும் திகதிகள் பொறிக்கப்படாத மற்றும் சுவை மாற்றத்திற்கு உள்ளான தயிர்கள் கைப்பற்றப்பட்டு வியாபாரிகளுக்கு சுகாதாரப் பரிசோதகர்களால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. புனித நோன்பு காலங்களில் முஸ் லிம் மக்கள் அதிகமாக வாழும் பிரதே சங்களில் அதிகளவில் தயிர் விற்பனை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்க விடயமாகும்.





# சிக்கல்களின் கூடாரமாகும் தமிழரசு?!



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கைத் தமிழரசுக் கட்சி நிர்வாக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் எதிர்கொண்டு நிற்கும் சிக்கல்கள் இப்போதைக்கு தீராது என்று தெரிகின்றது. தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு, மத்திய செயற்குழு தெரிவு மற்றும் தேசிய மாநாடு தொடர்பில் யாப்புக்கு முரணான நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன எனச் சுட்டிக்காட்டி திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண நீதிமன்றங்களில் இரு வேறு வழக்குகள் தொடரப் பட்டிருக்கின்றன. இதில், பிரதான வழக்காக இப்போது, நோக்கப்படும் திருகோணமலை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு அடுத்த தவணைக்காக இந்த மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. இதன்போது, நீதிமன்றத்தில் ஏற்கனவே, கட்சியின் தெரிவுகள் யாப்புக்கு முரணாக நடைபெற்றிருக்கின்றன என்று ஏற்றுக்கொண்ட கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புதிதாக தெரிவான தலைவராக அறிவிக்கப்பட்ட சிவஞானம் சிறீதரன் உள்ளிட்டோர், தங்களின் ஆட்சேபனைகளைச் செய்வதற்காக தவணை கோரியமையாலேயே, 24ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த வழக்கின் எதிராளிகளில் ஒருவரான எம்.ஏ.சுமந்திரன், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, தன்னுடைய சமர்ப்பணங்கள் மற்றும் ஆட்சேபனைகளை வாய்மொழி மற்றும் எழுத்து பூர்வமாக நீதிமன்றத்தில் முன்வைத்திருந்தார். அதில், கட்சியின் தெரிவுகள் யாப்புக்கு அமையவே நடைபெற்றிருக்கின்றன என்று கூறியமையோடு, தலைவர் தெரிவின் போது, இறுதி நேரத்தில் கட்சியின் தலைவரான மாவை, 20 பேரை வாக்களிக்க வைத்தமை மாத்திரமே முரணானது என்றிருக்கிறார்.அத்தோடு, தலைவர் தெரிவின் போது நாற்பதுக்கும் அதிகமான மேலதிக வாக்குகளினால் சிறீதரன், தன்னை வெற்றி கொண்டிருக்கிறார் என்று கூறும் சுமந்திரன், முரணாக வாக்களிக்க அனு மதிக்கப்பட்டவர்களின் வாக்குகளான 20ஐ தனக்கு எதிராக அளிக்கப்பட்ட வாக்குகள் என்று கருதி, அவற்றைக் கழித்தாலும் சிறீதரன், 20க்கும் அதிகமான வாக்குகளினால் வெற்றிபெற்றிருக்கிறார் என்ற வாதத்தின் பின்னால் நின்று வழக்கை எதிர்கொள்ள நினைக்கிறார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தெரிவும், அதன் பிறகு இடம்பெற்ற மத்திய செயற்குழுவுக்கான தெரிவும் பொதுக்குழு உறுப்பினர்களினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. யாப்புக்கு முரணாக சில தவறுகளை தலைவர் மாவை இழைத்திருக்கின்றார். அதுவும், தலைவர் தெரிவின் போது, மேலதிகமாக வாக்களிக்கப்பட்ட 20 பேர் தொடர்பிலானது என்ற நிலைப்பாட்டில் நின்று விடயங்களைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று சுமந்திரன் நம்புகிறார். அது, பொதுக்குழு தீர்மா னங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சதித்திட் டங்களைக் கடக்க உதவும் என்றும் அவர் நினைக்கலாம். தலைவர் தெரிவில் தான் தோற்றாலும் கட்சியின் ஓட்டத்தில் தன்னுடைய வகிபாகம் தொடர்பில் சுமந்திரனுக்கு தெளிவான நிலைப்பாடு இருக்கின்றது என்பதைத்தான் கடந்த இரண்டுமாதகாலம்உணர்த்தியிருக்கின்றது.

கட்சியின் தலைவர் தெரிவு என்பது, இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெற்றே ஆக வேண்டும். அதன்மூலம், ஏதேச்சதிகாரமற்ற கட்சிக் கட்டமைப்பை உருவாக்கிப் பேண முடியும் என்ற நிலைப்பாட்டை சுமந்திரன் இப்போது கண்டடைந்திருக்கிறார். அது, கடந்த காலத்தில் சுமந்திரனும் அங்கம் வகித்த 'பெருந்தலைவர் இரா.சம்பந்தனின் முடிவெடுக்கும் தலைமை' என்ற அதிகார கட்டமைப்பு இழைத்த தவறுகளில் தன்னுடைய பங்கு இருந்தமை தொடர் பிலான குற்றவுணர்ச்சியின் வெளிப்பாட்டினால் எழுந்ததாக இருக்கலாம். அல்லது, கட்சியின் பதவிகளைப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் அதில் இருந்து நகராமல், கட்சியை சீரழித்தமை தொடர்பில் கிடைத்த அண்மைய ஞானமோ தெரியாது. ஞானம் கிடைத்தமை தொடர்பில் அவர் கடந்த காலத்தில் வெளிப்படுத்திய கருத்துக்கள்தான், அவரை சம்பந்தன் மற்றும் மாவைக்கு நெருக்கமான கட்டத்தில் இருந்து வெளித் தள்ளுவதற்கும் காரணமானது. வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவினால் அல்லாடும் சம்பந்தன் தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அடுத்தவரிடம் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று சுமந்திரன் பொது வெளியில் பேசுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. குறிப்பாக, சம்பந்தன் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கமாட்டார். ஏனெனில், சுமந்திரனை தன்னுடைய தளபதியாகவே சம்பந்தன் வளர்த்தார். அவருக்கு அரசியல் அனுபவம் ஏற்படுவதற்கு முன்னரேயே, அதிக பொறுப்புக்களைக் கொடுத்து, கட்சிக்குள்ளும் தமிழ் அரசியலுக்குள்ளும் முக்கிய நபராக மாற்றினார். இன்று சுமந்திரன் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் தவிர்க்க முடியாத நிலைக்கு உயர்ந்துவிட்டார். அதற்கு, அவரின் உழைப்பும், திறமை யும் தற்துணிவும் கூடக் காரணம். அவைதான், அவரை வெகு சீக்கிரத்திலேயே வளர்த்துவிட்டது. அதுபோலவே, அவருக்கு எதிராக கட்சிக்குள் சம்பந்தன், மாவை தொடங்கி பலரையும் எதிராக திரும்பவும் சுமந்திரனின் தற்துணிவே காரணம்.

தமிழரசுக் கட்சியின் யாப்பை முன்வைத்துக் கட்சியின் செயற்பாடுகளை நீதிமன்ற வழக்குகளினூடாக எதிர்கொண்டால், அது இப்போதைக்கு தீராது. ஏனெனில், கட்சியின் யாப்புக்கு முரணாக கட்சியின் தலைமையும் நிர்வாகமும் தொடர்ச்சியான மீறல்களைச் செய்து வந்திருக்கின்றன. ஒரு கட்சியாக காலத்திற்கு தேவையான யாப்பு மாற்றங்களை தமிழரசுக் கட்சி செய்திருக்க வேண்டும். ஆனால், அது அவ்வளவு மாற்றங்களைச் செய்திருக்கவில்லை. அப்படி செய்ய முயன்றாலும், அதற்கான பொதுக்குழு அங்கீகாரங்கள் முறையாக பெறப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் உண்டு. குறிப்பாக, தலைவர் தெரிவில் கொழும்புக்கிளை

தொடர்ச்சி▼





# சிக்கல்களின் கூடாரமாகும் தமிழரசு?!

தொடர்ச்சி▲

என்று கூறி பலரும் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், கட்சியின் யாப்பின் பிரகாரம், வடக்கு கிழக்கில் இருக்கும் தொகுதிக்கிளையைச் சேர்ந்தவர்களும், மத்திய குழுவையும் சேர்ந்தவர்களும் உள்ளடங்கிய பொதுக்குழு உறுப்பினர்களே வாக்களிக்க முடியும் என்று வரையறுக்கின்றது. அப்படியான நிலையில், எப்படி யாப்பிற்குள் உள்வாங்கப்படாத கொழும்புக்கிளையைச் சேர்ந்தவர்கள் வாக்களிக்க முடியும் என்ற கேள்வி தவிர்க்க முடியாது. அதனை முன்னிறுத்தி நீதிமன்றங்களை நாடினால் விளைவு என்னவாகும்? இப்படி பல சிக்கல்களோடு தமிழரசுக்கட்சி இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னராக நீண்ட காலம் உறங்கு நிலையில் இருந்த தமிழரசுக் கட்சியை 2004 பொதுத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் உயிர்ப்பித்து, சம்பந்தன் – மாவை உள்ளிட்டவர்களிடம் கையளித்தனர். முள்ளிவாய்க்கால் முடிவுகளோடு விடுதலைப் புலிகளின் ஆளுகை அகற்றப்பட்டதும், தமிழரசுக் கட்சி தமிழர் அரசியலின் முதன்மைக்கட்சியாக மீண்டும் மாறியது. அதன்மூலம், சம்பந்தன் மூத்த தலைவரானார். அவர் கிட்டத்தட்ட ஏதேச்சதிகாரம் பெற்றவரானார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் அவர், பங்காளிக் கட்சிகளின் கேள்விகளுக்குப் அப்பாலான ஆளுமையாக மாறியிருந்தார். அந்த நிலை காலத்துக்கும் தொடரும் என்று சம்பந்தன் நினைத்ததன் விளைவுதான், தமிழரசுக் கட்சியை மறுசீரமைப்புச் செய்யாமல் விடுவதற்கு காரணமானது. தன்னுடைய காலத்துக்குப் பின்னராக கட்சியின் எதிர்காலம் எப்படிப்பட்டது, அதற்காக என்னென்ன மறுசீரமைப்பைச் செய்ய வேண்டும் என்பது தொடர்பில் அவர் சிந்திக்கவில்லை. மாறாக, தனக்குப் பின்னர் தான் சொல்வதையெல்லாம் செய்யக்கூடிய ஒருவரைத் தலைவராக முன்னிறுத்திவிட வேண்டும் என்று மாவையை தலைவராக்கினார். அது, கட்சியை இன்னும் இன்னும் மோசமாக சிதைத்து விட்டது. அதுபோல, கட்சியின் யாப்பு என்னென்ன விடயங்களை வரையறுக்கின்றது என்பது தொடர்பில் மாவை தொடங்கி கட்சியின் முக்கியஸ்தர்கள் பலருக்கும் தெளிவில்லை. அதனால்தான், தாங்கள் நினைத்த காரியங்களை யெல்லாம் செய்ய முயன்றதன் விளைவாக, கட்சி இன்று உடனடியாக தீர்க்கமுடியாத சிக்கல்களை சந்தித்து நிற்கின்றது.

தமிழரசுக் கட்சிக்குள் இருப்பவர்களில் ஒரு பகுதியினர், கட்சியை பதவிகளை அடைவதற்கான வழியாக மட்டுமே காண்கிறார்கள். அதுபோல, தமிழரசுக் கட்சியை மொய்த்துக் கொண்டிருக்கும் வெளித்தரப்பினரில் கணிசமானவர்கள், எதிர்காலப் பதவிகளைக் குறிவைத்துத்தான் தங்களது நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார்கள். ஊடக முதலாளிகள் தொடக்கம் பெரும் வியாபாரிகள் வரையில் தங்களின் அதிகாரத்துக்கான ஆசையை அடைவதற்கான வழியாக தமிழரசுக் கட்சியை காண்கிறார்கள். அது, பல முறையற்ற நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு காரணமாகின்றது. தமிழரசுக் கட்சியின் அதிகாரமிக்க பதவிகளைப் பிடித்துக் கொண்டிருக்க பலரும் முயல்வது, அதனை ஒரு பணம் கொழிக்கும் இடமாக பார்ப்பதனால் என்ற குற்றச்சாட்டுக்கள் உண்டு. கடந்த பொதுத் தேர்தலிலும் அதற்குப் பின்னரும் தமிழரசுக் கட்சியை வெளித்தரப்புக்களின் பணக் கொடுக்கல் வாங்கல்கள் சீரழித்ததான குற்றச்சாட்டும் உண்டு. இப்படியான குற்றச்சாட்டுக்களை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பெரியளவில் எதிர்க்கவும் இல்லை. அந்தக் குற்றச்சாட்டுக்கள், கட்சியின் மீதான அபிமானத்தை கேள்விக்குள்ளாக்கும் நிலையில், அவற்றை எதிர்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அப்படியான நடவடிக்கைகள் எதனையும் கட்சி செய்யவில்லை. மாறாக, புதிய தலைவர் தெரிவின் போதும் வெளித்தரப்புக்கள் தங்களின் அதீத தலையீடுகளை செய்தன என்ற குற்றச்சாட்டுக்களையும் சேர்த்தே எழ வைக்கும் காட்சிகள் அரங்கேறியிருக்கின்றன.

தமிழரசுக் கட்சி அடிப்படையில் இருந்து மறுசீரமைப்புப் செய்யப்பட வேண்டியிருக்கின்றது. அதில், முதலாவது கட்சியின் யாப்பு காலத்துக்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும். அத்தோடு, கட்சியின் தோற்றத்திற்கான இலக்கின் அடிப்படைகள் பேணப்பட வேண்டும். அதுதான், தமிழரசுக் கட்சிக்குள் தேவையற்ற குழப்பங்களை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு உதவும். “தமிழரசுக் கட்சியை பல ஆண்டுகளுக்கு நீதிமன்றப் படிகளில் ஏற்றி இறக்குவதற்கான வாய்ப்புக்கள் நிறைய உண்டு. கட்சியின் யாப்புத் தொடங்கி, நிர்வாக நடவடிக்கைகள் என்று நாளும் பொழுதும் முரணான நடவடிக்கைகளினால்தான் இன்று தமிழரசுக் கட்சி முட்டுச் சந்தை அடைந்திருக்கின்றது. இவற்றுக்கு எதிராக ஒவ்வொரு விடயமாக எடுத்து நீதிமன்றத்தை நாடினால் விடயம் இன்னும் மோசமாகும்.” என்று தமிழரசுக் கட்சியின் முன்னாள் முக்கியஸ்தர் ஒருவர் இந்தப் பத்தியாளரோடு பேசும் போது கூறினார்.

தமிழ்த் தேசிய அரசியலும், தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்களின் அரசியல் உரிமையைப் பெறுவதற்காக தோன்றியவை. ஆனால், தமிழ் மக்களுக்கான அறத்தினை தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் யாரும் உணரவில்லை. மாறாக, பதவிக்கும் அதிகாரத்துக்குமான போட்டிக் களமாகவும், கருவியாகவுமே தமிழரசுக் கட்சியைக் காண்கிறார்கள். இந்த நிலை தொடர்ந்தால் தமிழ் மக்கள், தமிழரசுக் கட்சியை மாத்திரமல்ல, தமிழ்த் தேசிய அரசியலிலும் நம்பிக்கையிழப்பார்கள். அப்போது, அரச ஒத்தோடிக் கட்சிகளும், தமிழர் விரோத சக்திகளும் தமிழ் மக்களை இலகுவாக ஆக்கிரமிப்பார்கள். அந்த ஆபத்தை தமிழரசுக் கட்சியினர் இன்னமும் உணர்கிறார்கள் இல்லை. இன்று சந்திக்கும் சிக்கல்களை எப்படி கடப்பது என்பது தொடர்பில், கட்சிக்குள்ளேயே ஒருங்கிணைவு இல்லை. மாறாக, ஏட்டிக்குப் போட்டியாக விடயங்களை கையாளும் நிலையும், விடய ஞானமற்றவர்களின் தலையீடுகளும் மாத்திரமே அதிகரித்திருக்கின்றன. இது, தமிழரசுக் கட்சியை கால காலத்துக்கும் முட்டுச் சந்துக்குள் முடக்கவே செய்யும்.





# நீதிமன்றுக்குள் நின்று நிழலாடப் போகின்றதா தமிழரசுக் கட்சி?

உரத்துப் பேசுவதால் உண்மையாகி விடாது. அதட்டிப் பேசுவதால் அர்த்தமுடையதாகி விடாது. நிமிர்ந்து பேசுவதால் நேர்மையுடையதாகி விடாது. ஆகவே அறிந்து, ஆராய்ந்து, தெளிந்து, தீர்க்கமாக, நிதானமாக வார்த்தையை உதிர்க்க வேண்டும். இல்லையேல் வீசிய அம்பே எம்மைக் குறி பார்க்கும்.

கனவுகளுடன் காற்றில் கத்திச் சண்டை நடத்துவதில் பயனில்லை. நிழலுடன் யுத்தம் புரிவதில் அர்த்தமில்லை. நீள் நினைவுகளுடன் நீசமற நிலைத்து எழ வேண்டும். ஒப்புக்குச்சப்பு வார்த்தைகள் எல்லாம் 'ஒய்யாரக் கொண்டையிலே தாளம் பூவாம் உள்ளே இருப்பது ஈரும் பேனுமாம்!' எனும் நிலை தான். தோற்றம் பெறும் உணர்வுகள் எப்போதும் அறிவை விஞ்சியவை அல்ல. ஆனால் அறிவோ உணர்வுக்குள் அகப்படுவதில்லை. அது தற்காத்து, தனைக் காத்து, தன் நினைக்காத்து, எக்காத்து இயம்புபவை. அதற்கு தான் வள்ளுவர் 'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்' என்றார்.

யாவும் நலனியல் வாதங்களுக்கு அப்பால் எதுவுமே நகர்வதில்லை. இயற்கை விதிக்கட்டமைப்பு எப்படி பயனுறுதியற்றதை அகற்றுகிறதோ அப்படித்தான் யாவும் இருப்பியல் கடந்து எதுவுமே நிகழ்வதில்லை. உண்மை பேசப்போகிறாயா, உதவாதவன் பெயர் பெறுவாய்! நன்மை செய்யப்போகிறாயோ நாதியற்றுத் தவிப்பாய்! நல்ல ஆலோசனை சொல்லப்போகிறாயா அல்லலுறுவாய்!

இவைதான் இன்றைய சமூகம், இங்கு சமூக சமநீதி, சமத்துவம் பேசுபவர்களுக்கு வழங்கும் ஒப்பற்ற உயர்நிலை. நன்னெறிப் பட்டம். எனவே சமனற்ற சமூகக் கட்டமைப்பில் இருந்து 'அறமற்ற கல்வி கத்தியில்லா உறை போன்றது' எனும் தத்துவார்த்துக்குள் அகப்பட்டுக் கொள்கிறது இன்றைய நவீன சிந்தனையும் செயலும்.

எனவே மாற்றிப் பேசுவதும், புரட்டிப் பேசுவதும், ஏமாற்று, வஞ்சகம், சூது செய்வதும் எல்லாம் அடிப்படை தகுதிகளாக இன்றைய பின் நவீனத்துவ நீதியற்ற தேர்தல் வணிக அரசியல் வெளிப்படுத்துகின்றது.

என்ன அதிகம் தத்துவம் பேசுகிறீர்கள் என்று யோசிக்கிறீர்களா? காரணத்தோடு தான் 'சோழியன் குடுமி சும்மா ஆடுமா?'

மக்களுக்கு மறதி அதிகம் என்று அரசியல்வாதிகள் திடமாக நம்புகிறார்கள். அதனால்தான் போகிற போக்கில் வார்த்தைகளை அள்ளி வீசிவிட்டு நகர்கிறார்கள். பாவம் எதுவும் அறியாத வாக்காளன், தொடர்ந்து நம்பி ஏமாறுகிறான். தான் ஏமாறுகிறேன் என்று தெரிந்தும் தொடர்ந்தும் வாக்களிக்கிறான். இந்த பலவீனத்தை அரசியல் வாதிகள் மூலதனமாக்கத் தெரிந்தவர்கள். அதனால்தான் தொடர்ந்து பதவி சுகம் காணுகிறார்கள்.



வி.எஸ்.சிவகரன்

எனவே மேலே கூறியவற்றில் எல்லாம் தமிழரசுக் கட்சியின் இரட்டை நிலைப் பாட்டையே பூடகமாகக் கோடி காட்டினேன். கடந்த பெப்ரவரி 29 இல் நடந்த தமிழரசுக் கட்சிக்கு எதிரான திருகோணமலை வழக்கிலே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைத் தவிர ஏனைய அறுவரும் வழக்காளியின் கோரிக்கையை ஏற்கின் றார்கள் எனக் கூறிவிட்டு, ஏதோ பெரும் அறத் தியாகம் செய்து பதவியை துறந்தவர்களாக ஆதரவு அடிப் பொடிகள் சிற்றின்பம் கண்டனர். அதற்கு ஆயுள் அதிகமில்லை என்பதை அவர்களே நிரூபித்துவிட்டனர். கடந்த மாதம் 17 ஆம் திகதி வவுனியாவில் நடந்த அரசியல் குழுக் கூட்டத்தில் கட்சி வழக்காளியுடம் சரணடைய முடியாது, அதில் சில விடயங்களில் தன்னால் ஒத்துப் போக முடியாது என சுமந்திரன் அவர்களால் முன்வைக்கப்பட்ட சட்ட வியாக்கியானத்தை அரசியல் குழுவில் கலந்து கொண்டவர்கள் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் கடந்த ஐந்தாம் திகதி வழக்கு தவணையின் போது நீதிமன்றில் அதனை சுமந்திரன் முன்வைத்துள்ளார். அதற்கு ஏனைய அறுவர் தரப்பு சட்டத்தரணிகளும் நீதிமன்றத்தில் எதிப்போ, ஆட்சேபமோ தெரிவிக்கவில்லை. அப்படி யானால் ஏலவே இவர்கள் எடுத்த தீர்மானத்திற்கு எதிர்மாறான வாதத்தையும் அவர்கள் ஏற்றுக் கொண் டுள்ளனர். எனவே சுமந்திரனின் நிகழ்ச்சி நிரலுக்குள் ஏனைய எதிராளிகளும் உள்வாங்கப்பட்டனரா என்ற கேள்வி எழுகிறது. அப்படியாயின், சுமந்திரனின் ஆலோசனையில்தான் கட்சிக்கு எதிராக இந்த வழக் குக்கள் தாக்கல் செய்யப்பட்டன என மாவை சேனா திராஜா, சிறிதரன் தரப்பால் இவ்வளவு நாளும் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் உண்மைத்தன்மை என்னவாகியது?

ஆகவே, இவர்கள் மக்கள் மன்றை மட்டுமல்ல, நீதிமன்றிலும் கூட முன்னுக்குப்பின் முரணையே

தொடர்ச்சி▼

# நீதிமன்றுக்குள் நின்று நிழலாடப் போகின்றதா தமிழரசுக் கட்சி?

தொடர்ச்சி▲

வெளிப்படுத்துகின்றனர். கடந்த பெப்ரவரி 29ல் எடுத்த தீர்மானத்தை கடந்த ஐந்தாம் திகதியில் பின்பற்றவில்லை. இவை சிறுபிள்ளைத்தனமான, யதார்த்தமான, முதிர்ச்சியற்ற, சட்டத்தெளியவற்ற செயற்பாடுகள். ஆகவே சுமந்திரன் காலத்தை நீடிக்க விரும்புகிறாரா? அல்லது தான் நினைத்ததை செய்கிறாரா? அல்லது கட்சியின் நலனை காப்பாற்ற முனைகிறாரா? அல்லது 'பாட்டும் நானே பாவமும் நானே' எனக் காய் நகர்த்துகின்றாரா? அவரை எதிர்த்தவர்கள் கூட கடந்த வழக்கில் கள்ள மௌனம் காக்கின்றனர். இதில் யார் கட்சி விசுவாசிகள், யார் விரோதிகள் என்பதை தீர்மானிக்கப் பட்டிமன்றம் வைத்துத்தான் பேசிப் பார்க்க வேண்டும். அதற்கும் நடுவரைத் தேட செய்வாய்க்கிரகம்தான் போக வேண்டும்.

சுமந்திரன் நீதிமன்றில் கூறிய விடயங்கள் சக எதிராளிகளுக்கோ அல்லது வழக்காளிக்கோ அல்லது இவர்களது சட்டத்தரணிகளுக்கோ புரிந்தன என எனக்குத் தெரியவில்லை. இந்த வழக்கு முழுக்க முழுக்க கட்சி யாப்பு சம்பந்தப்பட்டது. ஆகவே அதைப் புரிந்து கொள்ள பெரிய அறிவு அவசியம் தேவையில்லை. எழுத, வாசிக்கத் தெரிந்த யாவருக்கும் புரியும். பாவம் இந்த ஜனாதிபதி சட்டத்தரணிகளும் கட்சிக்காரர்களும் முதலில் யாப்பைப் படிக்க வேண்டும். இதில் எந்த முற்தீர்ப்புக்களையும் கோடி காட்டவும் இடமில்லை. இதில் யார் தந்திரசாலி, யார் ஏமாளி என்பதை சம்பந்தப்பட்டவர்கள் ஆழமாக யோசித்தால் புரியும் – உங்கள் அறியாமை. இந்தச் சட்டத்தரணிகளை இதற்கு மேலும் நம்பப் போகிறீர்களா என்பதை கட்சியில் உள்ள ஏனையவர்களாவது புரிந்து கொள்ள முயலுங்கள். வெறுமனே பதவிக்குக் கட்சி நடத்திப் பயனில்லை.

எழுபத்தைந்து ஆண்டுகளை கடந்து வந்த கட்சி. வடக்குக் கிழக்கில் ஆகப்பெரிய கட்சியும், அதிக வாக்காளரைக் கொண்ட கட்சியும் ஆகும். தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம் உட்பட பல வல்லமையுள்ள தலைவர்களைக் கொண்டிருந்த கட்சி. இப்போது சில்லறைத்தனமான சித்து விளையாட்டுக்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. இது காலக் கொடுமையா? அல்லது தமிழரின் தலைவிதியா? யாரிடம் யார் நொந்து கொள்வது? எல்லாம் எள்ளி நகையாடும் கொள்ளிவால் பேய்களாய் பதவி வெறி கொண்டு கொழுந்து விட்டு எரிகின்றன.

இதற்குள் கட்சித்தலைவர் மாவை சேனாதிராஜா வழக்கைப் பல ஆண்டுகளுக்குக் கொண்டு செல்லப்போகிறார் போல் உள்ளது. நீள் உறக்கத்தில் இருந்து எழுந்து வந்தவர் போல் 03-08-2008 இல் திருத்தப்பட்ட யாப்பை 2011-05-26 இல் தேர்தல் திணைக்களத்தில் ஒப்படைத்துள்ளனர். அதில் அப்போதைய தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவும் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவும் கையெழுத்து வைத்துள்ளனர்.

கட்சிகளின் ஏற்றுக் கொள்ளப்பட்ட யாப்புக்களை தேர்தல் திணைக்களம் தனது இணையத்தில் பதிவேற்றம் செய்துள்ளது. அதில் இந்த யாப்பு இல்லை.



தேர்தல் திணைக்கள இணையத்தில் இருப்பது 25-09-2020 இல் அப்போதைய பொதுச் செயலாளர் துரைராஜசிங்கத்தின் கையெழுத்துடன் வழங்கப்பட்டுள்ள யாப்பு. ஆகவே சட்டப்படி இந்த யாப்பே செல்லுபடியாகும். அதை மீறியுள்ளனர் என்பதே வழக்கும்.

எனவே, 03-08-2008 இல் திருத்தப்பட்ட யாப்பிலும் தற்போது தேர்தல் திணைக்களத்தில் உள்ள யாப்பிற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. ஒரு விடயம் மட்டுமே 2008 இற்கு உரியதில் உள்ளது. அதாவது கட்சியின் மத்திய குழுவிற்குத் தலைவர் பத்து பெயர் நியமிக்க முடியும், ஏனைய நாற்பது பேரும் கட்சித் தெரிவு முறையில் தேர்வாவர் என்பதுதான். ஆகவே மத்திய குழு ஐம்பது உறுப்பினர்கள் என்றுதான் உள்ளது. பொதுக்குழு பற்றியோ தொகுதி எண்ணிக்கை பற்றியோ புதிதாக எதுவும் இல்லை. இதை விடவும் காலத்திற்கு காலம் திருத்தப்பட்ட நான்கு விதமான யாப்புக்கள் உள்ளன. இந்தக் குழப்பமான மாறுபட்ட யாப்புப் பிரதிகளைக் கொண்டு நீதிமன்றங்களுக்குப் போனால் பல வருடங்கள் நீதிமன்றப் படி ஏற வேண்டி வரலாம். மிக மூத்த சட்ட ஜாம்பவான்கள் எல்லாம் காலத்திற்குக் காலம் இருந்தும் கட்சியின் ஆவணங்களை ஒழுங்கு முறையாகப் பேணப்படவில்லை. யாப்பே கட்சியின் உயிர் நாடி. அதைக் கூடச் சரி செய்யாதவர்கள் தமிழ்மக்களின் நீண்ட கால இனப்பிரச்சினைக்கு அறத்தின் வழி நின்று அறுதியிட்டு உறுதியாக செயற்படுவார்கள் என எவரேனும் இனிமேலும் நம்பினால் அவர்களை நல்ல மனநல வைத்தியசாலையில்தான் சேர்க்க வேண்டும்.

வெறும் கானல் நீராகவே கடந்த எழுபது ஆண்டுகளைக் கடத்தியுள்ளனர். இவர்கள் அனைவரும் தமது தவறை உணர்ந்து அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதே தமிழருக்குச் செய்யும் மிகப்பெரிய மகத்தான செயல். இனியும் இவர்களை தமிழினம் நம்புவது கடலில் உப்பைக் கரைப்பதற்கு ஒப்பானது.

வரும் தேர்தலுக்கு முதல் இவர்களின் தலைமை விவகாரம் முடியக்கூடிய ஏது நிலை காணப்படவில்லை என்பதுதான் நிலைமை.






# கண்ணிவெடி அகற்றும் பணிகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவு

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

இந்த வருட இறுதிக்குள் கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவடையும் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வுக்கான சர்வதேச தினத்தையொட்டி கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்று விசேட நிகழ்வும், கிரிக்கெட் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸூம் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

அங்கு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கூறியவை வருமாறு:-

கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போது, 2030 ஆம் ஆண்டுக்கு பின்னரே இலங்கையை கண்ணிவெடி அற்ற நாடாகப் பிரகடனப்படுத்த முடியும் என்ற ஒரு நிலைப்பாடு எழுந்தது. எனினும் இந்த வருட இறுதிக்குள் பெரும்பாலான வகையில்



கண்ணிவெடி அகற்றப்பட்டு மக்கள் தங்களுடைய குடியிருப்புகளுக்குள் செல்லக்கூடிய நிலை ஏற்படும் என எதிர்பார்க்கிறோம்.

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடும் சர்வதேச அமைப்புகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் நன்றிகளைக் கூறுகிறோம் மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல நடவடிக்கைகளுக்கு கண்ணிவெடி அகற்றப்படாமை பாரிய சவாலாக காணப்படுகிறது. பூநகரி மற்றும் முகமாலை பகுதிக ளில் அதிகளவு கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டி யுள்ளன.

இந்த செயற்பாடுகளில் பணியாற்றிக் கொண்டிருப்போர், தங்களின் உயிர்களை பணயம் வைத்து அதனை ஆற்றுகின்றனர். அவர்களின் சேவைக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறோம். மீள்குடியேற்ற செயற்பாடுகளை நிறைவு செய்ய கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்.

இதேவேளை, நிலக்கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் பெண்களை ஈடுபடுத்திய நாடு என்ற பெருமையை இலங்கை கொண்டுள்ளது.

அந்தவகையில், இலங்கையில் பெண்கள் முதன் முதலாக கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை வவுனியாவில் ஆரம்பித்தமை நினைவு கொள்ளத்தக்கது. இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு எமது விசேட நன்றியும் பாராட்டுதல்களும். - என்று அவர் கூறினார்.










# திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் சுவாமி தூக்கும் வெளிநாட்டவர்கள்

(ஹஸ்பர் ஹலீம்)

வரலாற்று சிறப்பு மிக்க திரு கோணமலை திருக்கோணேஸ்வரம் அருள் மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமானின் வருடாந்த மகோற்சம் நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சலத்தின் போது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இருவர் இந்து மத கலாச்சார உடையுடன் வருகை தந்து பக்தியுடன் சாமி தூக்கினர்.

சுவாமி வீதிஉலா வரும் போது அவர் கள் சுவாமியை தூக்கியுள்ளனர். வெளிநாட்டவர்கள் இவ்வாறு சுவாமி தூக்கும் நிகழ்வை அங்குள்ளவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு இருந் தமை குறிப்பிடத்தக்கது.



# சட்டவிரோத பதிவாளர் அலுவலகம் காத்தான்குடியில் மடக்கப்பட்டது!

காத்தான்குடியில் வீடொன்றுக்குள் சூட்சுமமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட சட்டவிரோத பதிவாளர் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டதில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து தரிசுக் காணிகளுக்கான 205 உறுதிப்பத் திரங்கள், 58 வெற்று உறுதிப்பத் திரங்கள், 63 காணி மாற்று உறுதிப் பத்திரங்கள், வெவ்வேறு அதிகாரிகளின் உத்தியோகபூர்வ கையொப்பத்துடன் கூடிய 30 பத்திரங்கள், 12 தேசிய அடையாள அட்டைகளின் 12 பிரதிகள் என்பன கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பை சேர்ந்த 54 வயதான ஒருவரே பொலிஸ் விசேட அதிரடிப்படை யினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணை களுக்காக காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



# இலங்கையரைப் பணயக் கைதிகளாக வைத்திருந்த பாகிஸ்தானியர்கள் நான்கு பேர் நேபாளத்தில் கைது

இலங்கையர்கள் நால்வரை பணயக் கைதிகளாக தடுத்து வைத்திருந்த பாகிஸ்தான் பிரஜைகள் நால்வர் நேபாளத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, சந்தேகநபர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர் என நேபாளப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனடா மற்றும் ருமேனியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி இலங்கையர்கள் நால்வரையும் சந்தேகநபர்கள் வரவழைத்துள்ளனர்.

42 தொடக்கம் 62 வயதிற்கிடைப்பட்ட பாகிஸ்தான் பிரஜைகள் நால்வரும், இலங்கையர்களிடமிருந்து மில்லியன் ரூபா கணக்கில் பணத்தை கொள்ளையடித்துள்ளமை தெரியவந்துள்ளது. இலங்கையர்கள் நால்வரையும் அவர்கள் தாக்கியுள்ளமையுடன், மிரட்டல் விடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் நால்வரையும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பான போராட்டம் நேற்றும் கவனவீர்ப்புடன் தொடர்ந்தது

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 13 ஆவது நாளாக நேற்றும் கவனவீர்ப்புப் பேரணியுடன் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அந்தப் பிரதேச செயலகத்தின் முன்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டம் தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக 13 ஆவது நாளான நேற்றும் பல்வேறு சுலோகங்களை முன்வைத்து பேரணியாக போராட்டத்தை மக்கள் மேற்கொண்டனர்.

மேலும் கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகச் செயல்பட்டு வந்த இந்தப் பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து 1993 ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை இந்தப் பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதன் காரணமாக பொது மக்களாகிய தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்து உள்ளனர் என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம் பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிருவாக அடக்குமுறைகளையும் கணடித்தும் –

திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிருவாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது எனத் தெரிவித்தும் –

அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் என மேலும் மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த பிரதேச செயலக விடயம் தொடர்பில் இறுதியாக கடந்த 2019 ஆண்டு கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் பல அரசியல்வாதிகள், பிரமுகர்களின் போலி வாக்குறுதிகளால் கைவிடும் நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகளுக்கு ஆதரவு தர அதிகாரிகளுக்குப் பணிப்பு

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளுக்கு தேவையான ஆதரவையும் பங்களிப்பையும் வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளை பராமரித்தல் தொடர்பாக மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை ஒன்றினூடாக இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டுடன் இணைந்துவரும் நீண்ட விடுமுறை காலப்பகுதியில் அனர்த்தம், அவசர தேவைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களும் தடையின்றி பராமரிக்கப்பட வேண்டும் எனவும் அந்த சுற்றறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.



# கையடக்கத் தொலைபேசிகளின் விலைகள் குறைக்கப்படவுள்ளன

கையடக்கத் தொலைபேசிகளின் விலைகளை 18 வீதம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தொலைபேசி இறக்குமதி மற்றும் விற்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலர் விலை குறைவடைவதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் சமித் செனரத் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 10,000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட கையடக்க தொலைபேசிகள் 7 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தில் மூழ்கியவை வெளித்தெரிகின்றன




(செ.தி.பெருமாள்)

மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது.

அதன் காரணமாக 1969 ஆம் ஆண்டில் நீரில் மூழ்கிய அனைத்து ஆலயங்கள் தற்போது தென்படுவதை காணக் கூடியதாக உள்ளது.

சண்முகநாதர் ஆலயம், புத்தரின் சிலை, இஸ்லாமிய பள்ளியின் தூபி, கங்கேவத்தை நகரில் இருந்த சித்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றை இப்போது பார்க்க கூடியதாக உள்ளது.

இன்னும் ஒரு சில தினங்களில் முன்னைய மஸ்கெலியா நகர் இருந்த பகுதிகளுக்கு சென்று பார்வை இட முடியும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.04.2024




இன்று வெற்றிகரமான பலன்கள் காண உறுதியும் திட்டமிடலும் அவசியம். பொறுப்புகள் அதிகமாக இருந்தாலும் நீங்கள் உற்சாகமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படாது. கவனக்குறைவு காரணமாக பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் மகிழ்ச்சி நிலவும். ஆழ்ந்த புரிந்துணர்வு ஏற்பட தேவையற்ற தீய உணர்வுகளை தவிர்க்கவும். இன்று வாய்ப்புக்கள் குறைந்து காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

கண்களில் எரிச்சல் ஏற்படும் என்பதால் அதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் பணிகளை எந்த இடையூறும் இல்லாமல் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்க விருக்கும் ஒரு முக்கியமான நிகழ்ச்சி பற்றி உங்கள் துணையுடன் வெளிப்படையாக பேசுவீர்கள்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். சேமிப்பு நிலை சிறப்பக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் பூர்த்தியாகலாம் நீங்கள் சமநிலையோடு காணப்படுவீர்கள். அனைத்து விஷயங்களிலும் கட்டுப்பாட்டுடன் இருப்பீர்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான சூழல் காணப்படும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு வந்து சேரும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல உறவை பராமரிக்க இயலும்.

சுதந்திரமான நிதி நிலைமையும் நிதியில் ஸ்திரத்தன்மையும் காணப்படும். நீங்கள் உங்கள் நிதிநிலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பயணம் செய்வதில் முனைந்து இருப்பீர்கள். உங்களைச் சுற்றி மாற்றங்கள் ஏற்படுவதை உணர்வீர்கள்.மற்றவர்களுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது சிறந்த பலன் தரும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.படைப்பாற்றல், புதுமையான திறமை மற்றும் திட்டமிடல் மூலம் நீங்கள் பணியை சிறப்பாக செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் சமநிலையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உறவில் திருப்தியை தக்க வைக்க நீங்கள் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.இன்று பண வரவு குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.




இன்று நற்பலன் காண நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் பயனுள்ளதாக இருக்கும். இறை மந்திரம் மற்றும் ஸ்லோகங்கள் கூறுவதன் மூலம் நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்து மேற்கொள்வதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் மனதில் குழப்பமான எண்ணங்கள் காணப்படும். அதனால் உங்கள் துணையுடன் நேர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்த மாட்டீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் நம்பிக்கையான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பணத்தை கையாளும்போது கவனமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். பணத்தை செலவு செய்யும்போது அதிக செலவுகளை கண்காணிக்க வேண்டும்.




இன்று நீங்கள் அதிக முயற்சி எடுப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் சாதகமான சூழ்நிலைகள் காணப்படும். இதனால் நீங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் மேற்கொள்வீர்கள். கடினமான பணிகளையும் திட்டமிட்டு எளிமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணவரவு நிலையாகவும் அதிக அளவிலும் காணப்படும். இன்று நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். அதன் மூலம் திருப்தி காண்பீர்கள்.




இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள். மறக்கமுடியாத தருணங்களை அனுபவிப்பீர்கள். சவாலான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் திறமை மூலம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். நீங்கள் கடினமான பணிகளையும் எளிமையாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் நெருங்கிய நண்பரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதன் மூலம் நீங்கள் இருவரும் நெருக்கமாவீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். இது உங்கள் எதிர்காலத்திற்கு உதவும். சந்தோஷமான மனநிலை நீங்கள் சிறந்த ஆரோக்கியம் பராமரிப்பீர்கள்.




முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று உங்கள் செயல்களில் கவனம் கொள்ள வேண்டிய நாள். உணர்சிவசப்படுவதலை தவிர்க்க வேண்டும். செயல்களை திட்டமிட்டு மேற்கொண்டால் வெற்றி பெறலாம்.

நீங்கள் சக பணியாளர்களால் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள். பொறுமையுடன் தொடர்ந்து செயலாற்றுங்கள்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக கருத்து வேறுபாடு காணப்படும். இது புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரும். அதனால் நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.01.2024

**தனுசு**

இன்று சவால்கள் நிறைந்து காணப் படுவதால் சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் வழக்கமான பணிகளை மேற்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அமைதியாக இருப்பதன் மூலம் நன்மை பெறலாம்.

பணியின்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இந்த சூழ்நிலையை சமாளிக்க பொறுமை அவசியம். சக பணியாளர்களுடன் அமைதியான முறையில் உறவாட வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உறவை தக்க வைத்துக் கொள்ள நட்பான அணுகுமுறை தேவை. உறவில் நல்லிணக்கம் ஏற்பட இருவரும் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் காரணமாக அதிக பணம் விரயமாகும்.

**கும்பம்**

இன்று பதற்றமான மன நிலையில் காணப்படுவீர்கள். அதனால் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிடைப்பது கடினம். உங்கள் அன்றாட செயல்களை மேற் கொள்ளும்போது கவனம் தேவை.

குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக காணப்படும். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவதங்கள் ஏற்படும். இது உறவில் மகிழ்ச்சியையும் அமைதியையும் பாதிக்கும்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும். ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

**மகரம்**

இன்று உங்களுக்கு சீரான பலன்கள் கிடைக்கும் நாள். இன்று நீங்கள் புத்துணர்ச்சியுடன் இருப்பதாக உணர வீர்கள். இன்று சுப நிகழ்சிகள் நடப்பதற்கான சாத்தியம் உள்ளது.

பணியைப் பொறுத்தவரை முன்னேற்றகரமான பலனுக்கு சாத்தியம் உள்ளது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

நண்பரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் இனிமையாக இருக்கும். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். சேமிப்பு நிலை உயர்வதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**மீனம்**

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்த நிச்சயமற்ற பலன்கள் காணப் படும். எல்லா விஷயங்களிலும் பொறுமை மேற்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணியில் கவனக்குறைவு ஏற்படலாம். எனவே நீங்கள் மேற்கொள்ளும் பணிகளில் கவனம் தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடப்பதும் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதும் நல்லுறவை வளர்க்க உதவும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்களால் முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

அதிக பதற்றம் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக இருப்பதும் பிரார்த்தனை மேற்கொள்வதும் சிறந்த பலன் தரும்.









# ரன் போ தெயார் லைவ்ஸ் (RTFL) ஆதரவு வழங்கும் AIA இன்சூரன்ஸ்


















AIA இன்சூரன்ஸ் கொழும்பின் மிகப்பெரிய அறக் கொடை ரீதியான ஓட்டமான ரன் போ தெயார் லைவ்ஸ் (RTFL) நிறுவனத்தின் ஓட்ட நிகழ்விற்குத் தொடர்சியாக நான்காவது வருடமாகவும் சில்வர் அனுசரணையாளராகத் தனது ஆதரவினை வழங்கியிருந்தது.

இலங்கையின் அபெக்ஷா புற்றுநோய் வைத்தியசாலைக்கு நிதி திரட்டும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வு இலங்கையின் மிகவும் அழுத்தமான சுகாதாரப் பிரச்சினைகளில் ஒன்றாக மாறியிருக்கும் புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் நம்பிக்கையின் கலங்கரை விளக்கம் ஒன்றாகவும் திகழ்கின்றது.

இலங்கையில் தற்போது புற்றுநோயானது ஒரு வலிமைமிக்க சவாலான விடயமாக உள்ளதுடன், நாட்டில் தொற்றா நோய்கள் (NCDs) கணக்கெடுப்பில் அதிக இறப்பு விகிதத்தையும் கொண்டுள்ளது.

AIA இன்சூரன்ஸ் நீண்ட காலமாகத் தொற்றா நோய்களுக்கு எதிராகப் போராடுவதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகளில் முன்னணியில் திகழ்வதுடன் இந்த செயற்பாடானது நாட்டின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை மேம்படுத்துவதில் AIA இன் உறுதியான அர்ப்பணிப்பினையே வெளிக்காட்டுகின்றது.

ரன் போ தெயார் லைவ்ஸ் (RTFL) நிகழ்வில் யுஐயு தனது ஊழியர்களின் தீவிரமான பங்கேற்பினையும் மற்றும் அசைக்க முடியாத ஆதரவினையும் பணிவுடன் சிறப்பித்துக் காண்பித்திருந்தது.

அத்துடன், நாடு முழுவதிலும் உள்ள AIA நிறுவனத்தின் ஊழியர்கள் மிகவும் ஆர்வத்துடன் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டிருந்தனர்.

AIA இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி சசித் பம்பரதெனிய கருத்துத் தெரிவிக்கையில்,

“இந்த நிகழ்வில் எங்கள் ஊழியர்களின் பங்கேற்பானது பச்சாதாபம், சமூகம் மற்றும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற எங்களின் பகிரப்பட்ட பெறுமதிகளையே பிரதிபலிக்கின்றது. நாங்கள் இந்த நோக்கத்தில் ஒருமித்து புற்றுநோய் சிகிச்சை மற்றும் நோயாளிகளைப் பராமரித்துக் கொள்வதற்கு நிதி திரட்டுவது மட்டுமன்றி நோயினை ஆரம்ப கட்டத்தில் கண்டறிதல் மற்றும் அதனைத் தடுப்பதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றோம்” – என்றார்.




# சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்திய 'அசட்லைன் தேசத்துக்கு சக்தி'




அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனத்தின் சமூகக் கூட்டுப்பொறுப்புத் திட்டமாக முன்னெடுக்கப்படும் அசட்லைன் தேசத்துக்கு சக்தி' நிகழ்ச்சித்திட்டத்தின் நான்காவது செயலமர்வு அண்மையில் கண்டியில் வெற்றிகரமாக நடைபெற்றது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் நிலையான வளர்ச்சியின் பிரதான அங்கமாகத் திகழும் நிதி பற்றிய அறிவு மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் அவர்களைத் தெளிவுபடுத்தும் நோக்கில் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பது இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

நிதி மற்றும் தொழில்முனைவு குறித்த ஆசிய பசுபிக் நிறுவனத்தின் தலைவர் சமிந்த குமாரசிறியால் இந்த செயலமர்வு முன்னெடுக்கப்பட்டதுடன், நிதி முகாமைத்துவம், வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிதல் மற்றும் மூலோபாயத்தைத் தயாரித்தல் தொடர்பில் அவர்களிடம் காணப்படும் திறனை பயன்படுத்துவது தொடர்பில் கலந்துகொண்டவர்களுக்கு சிறந்த புரிதல் ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்த தொழில்முனைவோரில் 50 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண் தொழில் முனைவோராக இருந்தனர் என்பது விசேட அம்சமாகும்.

பெண்களை வலுவூட்டுவதற்காக அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனம் 'லிய திரிய' என்ற பெயரில் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்து வருவதுடன், இதன் மூலம் பெண்கள் மேலும் வலுப்படுத்தப்படுகின்றனர்.

இந்தச் செயலமர்வு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வாக மாத்திரமன்றி, கண்டி பிரதேசத்தில் உள்ள தொழில் முனைவோரை வலுப்படுத்தும் நிகழ்வாக இதனை எடுத்துக் கொள்ள முடியும்.

தமது வணிகங்களுக்கு அவசியமான நிதி பற்றிய அறிவு மற்றும் திறனைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக உரிய நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுத்து தமது வணிகங்களை சரியான முறையில் நிர்வகித்து முன்கொண்டு செல்ல தொழில்முனைவோருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையே அசட்லைன் பைனான்ஸ் நிறுவனம் இந்நிகழ்ச்சியின் ஊடாக எதிர்பார்க்கின்றது.

டேவிட் பீரிஸ் குழுமத்தின் நிதி சேவைப் பிரிவின் முதன்மை நிறுவனமான அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனம் நாடு முழுவதிலும் 56 கிளைகளைக் கொண்டிருப்பதுடன், வாகன லீசிங், வாகனக் கடன், அசட் ட்ராஃப்ட், நிலையான வைப்பு வசதிகள், சூரியப்படல கட்டமைப்புக்கான நிதித் தீர்வுகள், சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் மற்றும் தனி நபர்களுக்கான நிதி வசதிகள் போன்று நிறுவனங்களுக்கான நிதித் தீர்வுகள் பலவற்றை வழங்கும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்.

# யூனியன் வங்கியின் புதிய டிஜிட்டல் வலயங்களுடன் டிஜிட்டல் வங்கியியல் அனுபவத்தை மேம்படுத்தல்

டிஜிட்டல் வங்கியியல் சேவைகளினூடாக வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் சௌகரியம் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில், யூனியன் வங்கி தனது முதலாவது டிஜிட்டல் வலயத்தை, கொழும்பு 3 இல் அமைந்துள்ள தனது தலைமையகத்தில் அறிமுகம் செய்துள்ளது.

அதனூடாக வாடிக்கையாளர்களுக்கு 24/7 நேரமும் ஸ்மார்ட் வங்கிச் சேவைகளை அனுபவிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வங்கியின் டிஜிட்டல் மாற்றியமைப்பு மூலோபாயத்துக்கமைய, நீடித்த சௌகரியம் மற்றும் ஒப்பற்ற வங்கியியல் அனுபவங்களை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் வகையில், எதிர்வரும் காலங்களில் இது போன்ற டிஜிட்டல் வலயங்களை முக்கியமான கிளைப் பகுதிகளில் நிறுவுவதற்கு வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

டிஜிட்டல் வலயங்களில் தன்னியக்க டெலர் இயந்திரங்கள் (ATM), பண மீள்-சுழற்சி இயந்திரங்கள் (CRM) மற்றும் காசோலை வைப்புகள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் பலவற்றுக்கான தன்னியக்கமயமான வசதிகள் போன்றன அடங்கியிருக்கின்றன.

இவற்றினூடாக, அத்தியாவசிய வங்கிச் சேவைகளாக கருதப்படும் பண வைப்புகள், பண மீளப் பெறுகைகள், பணப்புழக்கமில்லா வைப்புகள், யூனியன் வங்கிக் கணக்குகளுக்கான பணப் பரிமாற்றங்கள் போன்றவற்றுடன், யூனியன் வங்கி கடன் அட்டைகளுக்கான கொடுப்பனவுகளுடன், கணக்கு மீதி விவரங்களை அறிந்து கொள்ளல் போன்றவற்றை எந்நேரத்திலும் மேற்கொள்ளக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

“வாழ்க்கையை மெருகேற்றிடும் மாற்றம்“ எனும் வங்கியின் தொனிப்பொருளுக்கமைய, பெறுமதி சேர் செயற்பாடுகளினூடாக வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் சௌகரியத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

யூனியன் வங்கி, இணைய வங்கிச் சேவையை இலங்கையில் முதன் முறையாக அறிமுகம் செய்த வங்கியாக, 90 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் டிஜிட்டல் வங்கியியல் அனுபவத்தை முதன்முறையாக ஏற்படுத்தியிருந்தது.

வாடிக்கையாளர்களின் டிஜிட்டல் வங்கியியல் சௌகரியத்தை மேம்படுத்தும் நவீன வசதிகளைக் கொண்ட UBgo nkhigy; app அறிமுகம் மற்றும் நவீன தொழில்நுட்பம், ஒன்றிணைப்பு மற்றும் டிஜிட்டல் ஆற்றல்களுடனான தொழிற்துறையின் முன்னணி பண முகாமைத்துவ தீர்வான கூட்டாண்மை மற்றும் ளுஆநு வாடிக்கையாளர்களுக்கான BizDirect அறிமுகம் போன்றவற்றினூடாக தனது டிஜிட்டல் வங்கியியல் தீர்வுகளின் பிரசன்னத்தை தொடர்ந்தும் வியாபித்திருந்தது.

பரிபூரண டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் வகையில் உறுதியான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளை வங்கி தொடர்ந்தும் மேற்கொண்ட வண்ணமுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.







## மக்கள் வங்கியின் கோடி அதிர்ஷ்டம்:

# வெற்றியாளர்களுக்கான பணப்பரிசு வழங்கப்பட்டது

மக்கள் வங்கியின் 'People's Remittance கோடி அதிர்ஷ்டம் 2023" குலுக்கலில் வெற்றி பெற்ற மூன்று வெற்றியாளர்களுக்கு மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோர் அண்மையில் கொழும்பு 02 இலுள்ள மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் வைத்து பணப்பரிசுகளை வழங்கி வைத்தனர்.

அதன்படி, ரூபா ஒரு கோடிக்கு சொந்தக்காரரான கம்பஹாவை சேர்ந்த பி.கே.பி. நிரோஷன் சஞ்சீவவுக்கான காசோலை, மித்தெனியவில் வசிக்கும் டபிள்யூ. எம்.ஏ. நிலானி புத்ததாச மற்றும் மஹியங்கனையைச் சேர்ந்த எஸ்.ஜி.யு மதுரங்கி ஜயசிங்க ஆகியோருக்கு சொந்தமான முறையே மூன்று மற்றும் இரண்டு மில்லியன் தொகைக்கான காசோலைகள் இங்கு வழங்கப்பட்டன.

மக்கள் வங்கியின் சந்தைப்படுத்தல் தலைவர் நாலக விஜயவர்தன, பிரதிப் பொது முகாமையாளர் (கிளை முகாமைத்துவம்) நளின் பத்திரனகே, உதவி பொது முகாமையாளர் (வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்) அருணி லியனகுணவர்தன, பிரதம முகாமையாளர் (வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்) ரேணுகா அருணாச்சலம், சிரேஷ்ட முகாமையாளர் (வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்) திலினி பெரேரா பிராந்திய முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த நிகழ்வில் இணைந்தனர்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அயராது உழைக்கும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை ஊக்குவித்து பாராட்டும் நோக்கிலும், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும், 'People's Remittance கோடி அதிர்ஷ்டம் 2023' மக்கள் வங்கியால் ஆரம்பிக்கப்பட்டது.

ஆண்டு இறுதி மாபெரும் பரிசுகளுக்கு மேலதிகமாக, மாதாந்த வெற்றியாளருக்கு ரூபா ஒரு மில்லியன் தொகையும் வாராந்த வெற்றியாளருக்கு தலா ரூபா ஒரு லட்சம் தொகையும் வழங்கப்பட்டன.

